ஜநவிநோதிநி.

இல. 9.] செப்டெம்பர்மீ 1885. [புஸ்த. XVI.

தயாளகுணமுள்ள தீரன்.

தயையென்பது அருள்; அதாவது துன்புற்ரேரிடத்து உண்டா கும் இரக்கமாம். இந்தக்குணமானது மனிதர்களுக்குள்ள மற்றக் குணங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது. தன்னவன் புறத்தவன் என்னும் வேற்றுமையின்றி யெங்கும் ஒரு தன்மையாய் இரங்குவ தைப் பூததயையென்று சொல்லுவார்கள்.

பிரபுக்களுக்கும் பெருமைபெற்றவர்களுக்கும் இக்குணம் பெ ரும்பாலும் இராதென்றும், அப்படியுண்டாகுமாயின் அது பொன் மலருக்குப் பரிமளம் உண்டானதுபோல் ஆச்சரியப்படத் தகுந்த தென்றும் முன்னோர்கள் சொல்லியிருக்கிருர்கள்.

முற்காலத்தில் அரசு புரிந்த ராஜாக்களில் பெரும்பாலோர் இவ் வுயர்குணமுடையரா யிருந்தனர் ஆயினும், அயலாருக்குத் துன் பம்நேர்ந்தபோது தன்னுயிரைக்கொடுத்து மன்னுயிரைக்காக்கும் தீரமும் பேருளுமுடையராயிருந்தவர் சிலரே. ஆகையால் மற்ற அரசர்களைவிட அத்தன்மையானவர்கள் மிகக்கீர்த்திபெற்று வாழ்ந் தார்கள்.

முக்கியமாய் மற்றவர்களினும் அரசர்களுக்கு இக்குணம் இன் றியமையாதது. தம் பிராணனைக் கொடுத்தாயினும் அயலார் துன்பத் தை நீக்கவேண்டுமென்னும் தீரமுடைய தயாளுக்களை நாம் நினைப் பதினாலேயே நமது பாபங்கள் நாசமாகுமென்று பெரியோர் கூறி யிருக்கிருர்கள்.

இப்படிப்பட்ட தீரனான ஓர் அரசனுடைய நற்கதையை இதன டியில் எழுதுகிறோம்.

எல்லா உலகங்களிலும் உயர்வுபெற்றோங்கிய சூரியவமிசத்து ராஜாக்களில் திலீபன் என்னும் ஒரு அரசன் உதித்தான். அவன் மகததேசத் தரசன் மகளாகிய சுதக்ஷிணையென்பவளை மணம்புரிந்து அந்தத் தருமபத்தினியுடன் மனுநீதிமுறைவழுவாது அயோத்தி மாநகரில் அரசுபுரிந்துவந்தான்.

"யதாராஜா ததாப்ரஜா:" 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகளும்' என்கிற பழமொழிப்படி அவ்வரசன் அரசு செலுத்தும்போது அவ்விராச்சியத்துக்குடிகளும் 'ஒழுக்கமுயர்குலத்தினன்று' என்பதையுணர்ந்து தங்கள் தங்கள் ஒழுக்கத்தினின்று வழுவாமல் நடந்து வந்தார்கள்.

அரசநீதி நூல்களில் கூறியபடி ஆறில் ஒன்றுக்கு அதிகமாய் அவ்வரசன் திறைகொள்வதில்லை. அரசு செலுத்துமுறைகளில் ஒவ்வொருகாரியமும் முடிவு பெறுவதற்குமுன் அதைப்பற்றி முன்நடக்கும் மந்திராலோசனைகள் எள்ளளவும் வெளிக்குவராமல் ஆலோசனை செய்வான். உயர்குலத்திற் பிறந்தவனுக்கு கியானமும், கியானமுடையவனுக்கு விநயமும், திறமையுடையவனுக்குப் பொறுமையும், உதாரகுணமுடையவனுக்குத் தற்புகழ்ச்சியின்மையும், பெருமைபெற்றவனுக்கு ஸௌலப்பியமும் ஆகிய இவையாவும் மிகவும் அருமையான குணங்களெனப் பெரியோர்கள் வியந்து கூறியிருக்கின்றனர்; இக்குணங்கள் எல்லாம் அவ்வரசனிடத்தில் குடிகொண்டிருந்தன.

"ஶதேஷு ஜாயதே ஶூர: ஸஹஸ்ரேஷு ச பண்டித:।
வக்தா ஶதஸஹஸ்ரேஷு தாதா பவதி வா நவா॥"

நூற்றில் ஒருவன் சூரனுகவும், ஆயிரத்திலொருவன் பண்டிதனுகவும், லக்ஷத்தில் ஒருவன் வாசாலகனுகவுமிருப்பான்; இம்மொத்தத்திலும் தாதா (கொடுக்கும் குணமுள்ளவன்) இருப்பானே இரானே என்றும்,

"ஶூர இந்த்ரிய நிர்ஜேதா ஜிதக்ரோத ஸ்து பண்டித:।
வக்தா ப்ரியவத்ஸ்ய தாதா பூத தயாபர:॥"

என்றபடி இந்திரியங்களை ஜயித்தவனைச் சூரன் என்றும், ஆறுவது சினம் என்கிறபடி கோபத்தை அடக்கவல்லவனைப் பண்டிதன் என்றும், பிரியமும் ஹிதகரமுமானதைச் சொல்பவனை வாசாலகனென்றும், பூததயையுடையவனை தாதாவென்றும் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வரசன் இத்தன்மையான பலநற்குணங்களும் குடிகொண்டமனத்தனுய்த் தனக்கேற்ற நல்லமைச்சர்களின் ஆலோசனையைக் கேட்டுக் குடிகளைக் காத்துவந்தான்.

ஒருகால் திலீபராஜன் தேவலோகத்திற்குச் சென்று இந்திரனைத் தரிசித்துப் பூலோகத்திற்குத் திரும்பி வந்தான். வரும்வழியில் கற்பகவிருக்ஷத்தின் நிழலில் காமதேனு படுத்திருந்தது. அரசனே தன் பத்தினி கன்னிகழிந்து குளித்திருப்பதுபற்றி உடனே தான் போய்ச் சேரவேண்டுமென்கிற துரிதத்தினுல் அந்தக் காமதேனுவைப் பாராமையால், அதைப் பிரதக்ஷிணப் பிரணமங்களால் உபசாரம் செய்யாமல் வேகமாய்த் தேரைச் செலுத்திக்கொண்டு வந்துவிட்டான்.

காமதேனு கோபம்கொண்டு, நீ இப்போது வேகமாய்ச் செல்ல வேண்டியது மறைநூல் முறையேயாயினும் என்னைப் பூஜியாமல் போகிறபடியால், நீ உத்தேசித்துச் செல்கிறபடி உன் பத்தினியிடத்தில் உனக்குப் பிள்ளையுண்டாகக்கடவதன்று எனச்சபித்தது; உடனே அவ்வரசன் தர்மிஷ்டன் என்பதை நினைத்துக் காமதேனு கருணைகூர்ந்து, இனி நீ என்னையாவது என் கன்றையாவது நியமத்துடன் பூசித்தால் பிறகு உனக்குப் புத்திரன் உண்டாகக்கடவதென்று அனுக்கிரகம் செய்தது.

அரசனது ரதம் விரைவாய்ச் செல்லுகிற ஓசையாலும், அருகே ஆகாயத்தில்ஓடும் கங்காநதியின் இரைச்சலாலும் திக்கஜங்கள்மதித்து வீரிட்ட பேரொலியாலும் இப்படிக் காமதேனு சபித்தது திலீபராஜனுக்காயினும் அவன் ஸாரதிக்காயினும் கேளாமல் போய்விட்டது. அதனால் அரசன் அதற்கு ஏற்றபரிகாரம் செய்துகொள்ளக் கூடாமற் போனதுபற்றி அவனுக்கு வெகுநாள் ஸந்தானம் உண்டாகவேயில்லை.

அரசனுக்கு ஸந்தானம் இல்லாமல்போகவே குடிகள் வருத்தமுற்றார்கள். அரசனும் அரசியும் அதன்காரணம் தெரியாமல் வெகுநாள் யோசித்துக் கடைசியாய், தமது குருவாகிய வசிஷ்டமாமுனிவரிடத்திற்குச்சென்று இவ்விஷயத்தைப்பற்றி விசாரிப்பதுடன், அவர் நியமனப்படி விரதங்களிருந்தாகிலும் மக்கட்பேறு பெறவேண்டுமென்று நிச்சயித்து, மந்திரிமார்களை ராச்சியபரிபாலனம்செய்து வரும்படி உத்தரவுசெய்து, சேனைகளைத் திரட்டிக்கொண்டுசென்றால் தபோவநத்திற்கு அழிவு உண்டாகுமென்று நினைத்து, இன்றியமையாத சில பரிவாரங்களைமாத்திரம் கூட்டிக்கொண்டு ரதத்தின்மேல் ஏறி வசிட்டமாமுனியின் ஆச்சிரமத்திற்குப்புறப்பட்டுப்போனார்கள்.

போகும்போது மங்களமான சகுனங்கள் ஆயின: எதிர்காற்றடியாமல் பின்காற்று மிருதுவாக வீசியது; தாமரைத்தடாகங்களில் மலர்ந்திருக்கும் மலர்களினது வாஸனை குமுகுமுவென்று வீசியது; இவர்கள் இருவருமாய் ஏறிச்செல்லும் ரதத்தின் ஓசையைக் கேட்ட மயில்கள் மேகத்தின்முழக்கமென்று நினைத்து, கே கா என்று கூவிக்கொண்டு தோகைகளைவிரித்துக் கும்பல்கும்பலாய் ஆடிக்கொண்டுதிரிந்தன; மான்கள்வழியைவிட்டுச் சிறிதுவிலகி வரிசைவரிசையாய் வெருள வெருளக் கண்களை விழித்துக்கொண்டு தேரையே பார்த்துக்கொண்டு நின்றன; கம்பங்கள் இல்லாமலே தோரணம் நாட்டியதுபோல் ஆகாயத்தில் ஸாரஸபக்ஷிகள் வரிசைவரிசையாய்ப் பறந்துகொண்டிருந்தன; இவ்வரசன் தானமாகக் கொடுத்திருக்கும் கிராமங்களிலுள்ள பிராமணர்கள் பூர்ணகும்பத்துடன் எதிர்கொண்டுவந்து உபசரித்தார்கள்; இடையர்கள் அன்று கடைந்தெடுத்த வெண்ணெயுருக்கிய நெய்யைக் கொண்டுவந்து அரசனுக்கு உபஹாரமாகக் கொடுத்தார்கள். இவ்வாறாகச் செல்லும்பொழுது

வழியிலுள்ள காட்டுமரங்களின் பெயரை அரசன் தன் பத்தினிக்குச் சொல்லிக்கொண்டும், மற்றும் வனங்களிலுள்ள விசேஷங்களைக் காட்டிக்கொண்டும்வர, ஆகாயத்தில் பலவகைப் பறவைகள் பறப்பது முதலிய விசித்திரங்களை அங்கங்கே தலைநிமிர்ந்து இருவருமாய்ப் பார்த்துக் களித்துக்கொண்டு வெகு வேகமாய் அன்று ஸாயங்காலமே வசிட்டமாமுனிவர் ஆச்சிரமம்போய்ச் சேர்ந்தார்கள்.

அவ்வாச்சிரமத்தில் வாயில்களிலே குழந்தைகள் விளையாடுவது போல மான் குட்டிகள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. வெயிலிலுலர்த்திக் குவித்த செந்நெல்களின் அருகே மான்கள் அசைவு போட்டுக்கொண்டு படுத்திருந்தன. ஸமித்து முதலியவை கொண்டுவரும்பொருட்டுக் காட்டிற்குப்போயிருந்த பிள்ளைகளெல்லாம் திரும்பிக் கும்பல்கும்பலாய் வந்துகொண்டிருந்தார்கள். ரிஷிப் பெண்கள் ஆச்சிரமத்திலுள்ள இளஞ்செடிகளுக்குத் தண்ணீர் கொட்டி, உடனே பறவைகள் அந்தப் பாத்தியிலுள்ள தண்ணீரைக்குடிக்க வரும்பொருட்டுத் தாங்கள் சமீபத்திலிராமல் ஒதுங்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். இவ்வகை விசித்திரக்காட்சியுள்ள அந்திப்பொழுதில் அரசன் குருவின் ஆச்சிரமம்சேர்ந்து பத்தினியை முன்னே தேரினின்றும் இறக்கிப் பிறகு தானும் இறங்கிக் குதிரைகளை இளைப்பாற்றும்படி ஸாரதிக்குக் கட்டளையிட்டு இருவருமாய் ஆச்சிரமத்துக்குள்சென்று குருவின் அனுட்டானம் முடிந்த உடனே அவரைக் கண்டு வந்தனம் செய்தார்கள்.

வசிட்டமாமுனிவர் அரசனைக்கண்டவுடனே நல்வரவு விசாரித்து அவனுக்கு அதிதிபூஜைசெய்து அரசுசெலுத்தும் நீதிமுறையைப்பற்றியும், குடிகளின் க்ஷேமத்தைப்பற்றியும், அரசனுடைய க்ஷேமத்தைப்பற்றியும் விசாரிக்க, அரசன் சொல்லத்தொடங்கினான்.

ஸ்வாமி, தாம் எனக்குக் குருவாயிருக்கும்பொழுது என்ன குறைவு; தமது அனுக்கிரகத்தால் ராஜகாரியங்கள் யாதொரு இடையூறுமின்றிச் சுகமே நடந்துவருகின்றன. தமது மந்திரபலத்தினாலே மாதம் மும்மாரிபெய்கின்றது; நாட்டுவளப்பத்திற்குச் சிறிதும் குறைவில்லை. தமது தேஜோபலத்தினாலே அயோத்தியில் ஜனங்கள் அனைவரும் சிரஞ்சீவிகளாயும் அச்சமின்றிச் சுகிகளாயும் வாழ்கின்றனர். எனக்கும் யாதொரு குறையுமில்லை; எல்லாச் செல்வங்களும் பெற்றுச் சுகித்திருக்கின்றேன். ஆயினும், அடியேனுக்குப் பிறகு இவ்விராச்சியபாரத்தைத் தாங்கத்தக்க புதல்வன் ஒருவன் பிறக்கவில்லையே என்பது பெருங்குறையாயிருக்கின்றது. அன்றியும்,

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.'

என்றபடி மக்கட்பேற்றினும் பெரும்பேறு வேறில்லையென்கிறார்களல்லவா? மேலும் 'அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி' பிள்ளையில்லாதவனுக்கு நல்ல கதியில்லையெனவும்,

'எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.'

நன்மக்களைப்பெற்றோர்க்கு எழுபிறப்பிலும் துன்பங்கள் உண்டாகாவெனவும் முன்னோர்கள் கூறியிருக்கின்றனர்.

'மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.'

'குழலினிதி யாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.'

என்று முன்னோர்கூறியபடி மக்கள் மழலைச்சொற்கேட்கப் பாக்கியம் பெறுதவனாயிருக்கின்றேன். ஆதலின் இவ்வின்பம் ஒன்று இல்லாமையால் மற்றின்பம் யாவு மென்மனதிற்கின்பமாயே தோற்றாமலிருக்கின்றன. எமது மூலபுருஷனான இக்ஷ்வாகுமுதல் என் தகப்பனார் வரையிலுமுள்ள சூரியகுலத்தரசர்கள் அனைவருக்கும் பெறுதற்கரிய மனோபீஷ்டங்களையெல்லாம் தாம் தலைக்கட்டிவைத்திருக்கின்றபடியால், அவ்வண்ணமே என் மனோரதத்தையும் தலைக்கட்டிக்கொடுக்கவேண்டுமென்று சொல்லிப் பலவாறு பிரார்த்தித்தான்.

வசிட்டமாமுனிவர் அவ்வேண்டுகோளுக்கிசைந்து இவ்வரசனுக்குச் சந்ததியுண்டாகாமலிருப்பதற்குக் காரணமென்னவென்று கியானதிருஷ்டியால் கண்டு காமதேனுவின் சாபமெனத் தெரிந்துகொண்டு, காமதேனு சபித்ததையும், அது அரசனுக்காவது சாரதிக்காவது கேளாமற்போனதன் காரணத்தையும் அரசனுக்குச் சொல்லி, அதைப் பூசித்துப் பிரார்த்தித்தாலன்றிப் புத்திரஸந்தானம் உண்டாகாது; ஆயின், பிரகிருதத்தில் காமதேனு பாதாளலோகத்தில் வருணன்செய்யும் யாகத்திற்குப்போயிருக்கின்றது, அது திரும்பிவர வெகுநாள் செல்லும்; அங்கேபோய்ப் பூஜைசெய்வதும் அஸாத்தியமென்று எடுத்துரைத்து, காமதேனுவின் கன்றாகிய நந்தினியென்னும் பசு இவ்விடத்திலிருக்கின்றது; இதனைப் பூஜைசெய்தாலும் காமதேனுவைப் பூஜித்ததுபோலவேதான்; ஸந்ததியுண்டாகுமென்று வசிட்டமாமுனிவர் கூறினார்.

இவ்வார்த்தை முடிவதற்குள்ளேயே பகலில் காட்டிற்கு மேயப்போயிருந்த நந்தினி தன் கன்றைநினைத்து முலைவழியேநின்று பால்பெருக, அரசன் உட்கார்ந்திருக்குமிடத்துக்குச் சமீபமார்க்கமாய் ஆச்சிரமத்திற்குள் வந்துசேர்ந்தது. அதைக்கண்டு வசிட்டமாமுனிவர் சந்தோஷித்து அரசனை நோக்கி, வத்ஸா திலீபா, நந்தினியைப் பூஜைசெய் என்று நான் சொல்லி முடிவதற்குமுன்னமே இதுவந்து சேர்ந்தது; இதுவே உத்தமமான சகுனம், இதைப் பூஜைசெய்தால் துரிதத்திலேயே உன் அபீஷ்டம் நிறைவேறுமென்பதற்குத் தடையில்லை; நாளையதினம் முதலே பூஜைக்குத் துவக்கவேண்டும்: காலை

யிலெழுந்து சுதக்ஷிணை நந்தினியைச் சந்தனம் மஞ்சள் மாலைமுதலியவைகளால் அலங்கரிக்கவேண்டும்; கன்றுவிட்டானபின்பு நீ அதை அவிழ்த்து ஓட்டிப் பின்றொடர்ந்து செல்லவேண்டும். உன் பத்தினிமாத்திரம் தபோவநம்வரையில் பின்றொடர்ந்து திரும்பிவிட்டு மறுபடி மாலையில் திரும்பிவரும்போது எதிர்கொண்டுசென்று பூஜைசெய்து ஆச்சிரமம் வரையில் பின்றொடர்ந்து வந்து மங்கள தீபம் வைத்துக் கூடவே இருக்கவேண்டும்; கன்றுவிட்டான பிறகு பசு படுத்துத் தூங்கினவுடனே நீங்களும் படுத்து, அது எழுந்தவுடனே நீங்களும் எழுந்திருக்கவேண்டும். நீ மாத்திரம் பகல் முழுதும் நந்தினியுடன்கூடவே சென்றுகொண்டிருப்பதுடன், அது நிற்கும்போது நிற்பதும், போகும்போது போவதும், படுக்கும்போது படுப்பதும், தண்ணீர் குடிக்கும்போது தண்ணீர் குடிப்பதுமாய், அதன் நிழல்போலே நடந்துகொள்ளவேண்டும்; கனி காய் கிழங்குகளையே நீங்கள் புசித்துக்கொண்டு இப்படியே இப்பசுவின் அனுக்கிரகம் பெறுமளவும் பிரதிதினமும் நடந்துவரவேண்டும்; இவ்வாறு செய்தால் துரிதமே உன்மனோதம் ஈடேறும் என்று சொல்லி அரசனுக்கு உத்தரவு கொடுத்தனுப்பிவிட்டார். பின்பு அவ்விருவரும் குருபத்தினியாகிய அருந்ததி தேவியை வந்தனம்செய்து ஆசிபெற்றுத் தங்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த விடுதியிற்சென்று படுத்திருந்தார்கள்.

மறுநாள் விடியற்காலத்திலே முனி குமாரர்கள் வேதாத்தியயனம் செய்த வேதகோஷத்தைக்கேட்டுத் திலீப மகாராஜனும் சுதக்ஷிணாதேவியும் உடனேயெழுந்து காலைக்கடன்களை முடித்த பிறகு, குருவின் நியமனப்படி சுதக்ஷிணை நந்தினியை அலங்கரித்துப் பூஜித்து அவிழ்த்தோட்டித் தபோவனம்வரையில் வழிவிட்டுத் திரும்பிவிட, அரசன் அதனுடன்கூடவே வனத்திற்குச் சென்றான். அவ்விடத்தில் அவன் அப்பசுவின்மேலேயே பார்வைவைத்து அதன் மேல் ஈ எறும்பு முதலியவைகூட மொய்க்காமல் ஓட்டி, வேண்டும்போது தினவு சொரிந்துகொடுத்துத் தன்கையால் பசும்புல்பிடுங்கிக் கொடுத்து, அதை வேண்டியபடி உபசரித்து, அந்திப்பொழுதில் அது ஆச்சிரமத்திற்குத் திரும்பும்போது தானும் கூடப் பின்றொடர்ந்து திரும்பிவந்தான்.

பசுவின்வரவை எதிர்பார்த்திருந்த சுதக்ஷிணாதேவி எதிர்கொண்டு சென்று நடுவழியில் நந்தினியைப் பூஜைசெய்தாள். நந்தினி தன் கன்றை நினைத்து வெகு வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தும் இவள் பக்தியால் பூஜைசெய்தமைபற்றிச் சற்று நிதானித்து நின்று பூஜையை யேற்றுக்கொண்டது. அதுகண்டு தம்பதிகள் இதுவும் ஒரு சுபக்குறியென்று மனமகிழ்ந்தார்கள். பின்பு குருவின் நியமனப்படி அன்றிரவும் அதனுடன்கூடவே படுத்திருந்தார்கள். இவ்வாறாக இருபத்தொருநாள் முறைதவறாமல் பூஜைசெய்துவந்தார்கள்.

அரசன் நந்தினியைப் பின்ருெடர்ந்து செல்லும்போது கையில் அம்பும் வில்லும் எடுத்துக்கொண்டு மற்றப் பரிவாரங்களையெல்லாம் நிறுத்திவிட்டுத் தனியே போய்க்கொண்டிருப்பான். இவன் வில்லும் கையுமா யிருந்தாலும் இவன் முகத்தைப் பார்க்கும்போதே பூததயையுடையவனென்று விலங்குகளுக்குக்கூடத் தெரியவந்ததனுல் மான்கள் பயந்தோடாமல் ஆங்காங்கு நின்று இவனை அச்சமின்றிப் பார்த்துக்கொண்டிருந்தன. இவ்வரசன் காட்டிற்குப்போகத் துவக்கியபின்பு காட்டுத்தீ ஒருநாளும் பற்றியெரியவில்லை; எளிய ஜந்துக்களைப் பலமுள்ளவைகளான ஜந்துக்கள் பிடித்து வருத்தவில்லை; பூக்கள் மலர்ந்து பழங்கள் பழுத்துக் குளிர்காற்றுவீச, அந்த வனமானது உபவனம்போலக் கண்களுக்கு இனியதோர் காட்சியாக விளங்கியது.

(இன்னும் வரும்.)

ஸம்ஸ்கிருத கவிகள் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

தண்டி.

பாணனென்னும் மஹாகவியின் காலத்துக்குப்பிறகு ஸம்ஸ்கிருத பாஷையில் வாசகநடை எழுதும் திறமையில் பெயர்பெற்றவர் தண்டி யென்பவர். இவரது காலத்தை நிச்சயமாக உறுதிப்படுத்த ஆதாரங்களில்லை. ஆயினும் இவர் காளிதாஸனுடைய காலத்திலிருந்ததாகவும், காளிதாஸன் தண்டியைத் தன்னைவிட உயர்ந்த கவி என்று மெச்சிக்கொண்டதாகவும் சனங்கள் சொல்லுகிருர்கள். அன்றியும் காளிதாஸன்செய்த சேதுபந்தம் என்ற கிரந்தத்திலிருந்து தண்டி அநேக விஷயங்களைத் தமது புஸ்தகங்களில் எடுத்துக்கொண்டிருக்கிருர். இவைகளால் நாம் தத்காலத்தில் நிச்சயிக்கக்கூடியது என்னவென்ருல், இவ்விருவர்களும் சற்றேறக்குறைய ஒரேகாலத்தில் இருந்திருக்கலாம் என்பதேயாம். காளிதாஸன் காலம் நாம் முன்னமே கூறியிருக்கிருேமாகையால் அக்காலத்திலேயே தண்டியுமிருந்ததாக எண்ணிக்கொள்ளவேண்டும். இவர் அலங்கார கிரந்தமும் இயற்றியிருக்கிருர். தசகுமாரசரித மென்கிற பத்து ராஜகுமாரர்களைக் குறித்த கதையும் அவர் எழுதியதேயாம்.

சோமதேவர்.

பாணன், தண்டி இவர்களுக்குப்பிறகு வாசகநடையில் தேர்ந்தவராக சோமதேவரைச் சொல்லலாம். இவர் "கதாஸரித்ஸாகரம்" "கதைகளென்ற ஆறுகள் ஓடிப்பாயும் சமுத்திரம்" என்ற புஸ்தகத்தை எழுதியிருக்கிருர். இப்புஸ்தகமானது காச்மீரதேசத்தரசனுன ஹர்ஷமகா

ராஜன் கி. பி. 1101-ம் வருஷம் சண்டையில் மாண்டுபோகவே, அவனையிழந்து தவித்துக்கொண்டிருந்த அவனது தாயாகிய சூரிய வதிஅம்மாளைச் சந்தோஷப்படுத்தச் செய்யப்பட்ட கிரந்தம் என்பதாகத் தெரியவருகிறது. இதைக்கொண்டு சோமதேவரென்பவர் 12-வது நூற்றாண்டில் இருந்தவராக நாம் அனுமானிக்கலாம். இவர்செய்த கிரந்தம் மிகவும் முக்கியமானது. ஆதாரங்களுக்கு அனுகூலமான அநேக கதைகள் இவர் சொல்லியிருக்கிறார். இப்படி சொல்வதில் பொய்யென்பதைக் கலக்காமல் உள்ளதை உள்ளபடியே எழுதியிருக்கிறார்.

பட்டநாராயணன்.

ஸம்ஸ்கிருதத்தில் வாசகநடையில் தேர்ந்தவர்களிலே முக்கியமான சிலரைப்பற்றி ஒருவாறுகூறினோமே. இனி நாடகங்கள் செய்த சில மகா கவிகளைப்பற்றிச் சொல்லத்தொடங்குவோம்.

பாணகவி தமது சினேகிதர்களுக்குள் நாராயணன் என்ற ஒருவரைக்குறித்ததாக நாம் முன்னமே சொன்னோமல்லவா. இவர்தாம் பட்டநாராயணன் என்பவர். இவர் "வேணீசம்காரம்" என்ற நாடகத்தை எழுதியிருக்கிறார். இவர்காலமும் பாணன்காலமாகையால் 7-வது நூற்றாண்டின் மத்தியாகத் தெரியவருகின்றது.

நமது தேசத்துக்குக் கல்விக்களஞ்சியமாகிய ராஜேந்திரலாலமித்திரர் என்ற மகாபண்டிதர் பட்டநாராயணனை ஆதிசூர மகாராஜாவின் காலத்தில் வசித்ததாகக் கூறியிருக்கிறார். இவ்வரசன் காலம் கி. பி. 1072. அப்படி இன்னும் ஆதாரம் ஏற்படும் பக்ஷத்தில் பாணன் தம் சிநேகிதாராகக் குறித்துக்கொண்ட நாராயணன் என்ற கவி பட்டநாராயணன் அல்லவென்று தீர்மானித்துவிடலாம். 7-வது நூற்றாண்டிலோ அல்லது 11-வது நூற்றாண்டிலோ பட்டநாராயணன் வசித்ததாக நாமிப்பொழுது கண்டுபிடித்திருக்கும் ஆதாரங்களினால் சொல்லலாம். பட்டநாராயணனுடைய நடை அவ்வளவு பழையநடை என்று புலப்படவில்லையாகையால் பண்டித ராஜேந்திரலாலமித்திரர் கூறியதே சரியாக இருக்கலாம். ஆபினும் போகப்போகப் பார்ப்போம். இவர் நெடுநாளிருந்தவிடம் கன்னியாகுப்ஜமாம்.

ஸ்ரீ ஹர்ஷன்.

இவர் "ரத்நாவலி" என்கிற நாடகத்தையும் இன்னும்பல கிரந்தங்களையும் எழுதினதாக ஜனங்கள் சொல்லுகிறார்கள். இவர் காச்மீரதேசத்தரசர். கி. பி. 1089-வருஷம் முதல் 1201 வருஷம் வரையில் அத்தேசத்தை ஆண்டவர். அநேக கவிகளுடைய சரித்திரத்தைவிட ஸ்ரீ ஹர்ஷனுடைய சரித்திரத்தை நிச்சயமாக ஏற்படுத்தப்பல ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளைக்கொண்டு இவரது காலத்தை நாம் நன்றாகக் கண்டுபிடிக்கலாம்.

காச்மீரதேசத்தில் ஸங்கிராமராஜா என்றொரு அரசன் கி. பி. 1003-ம் வருஷம் முதல் 25 வருஷம் வரையில் ஆண்டுவந்தான். இவனது காலத்திற்குப்பிறகு இவனது மூத்தகுமாரனாகிய ஹரி என்றவர் பட்டத்திற்குவந்து 22 நாள் ராச்சியபரிபாலனம் பண்ணித் தமது தாயாராலேயே அகற்றப்பட்டார். அவருக்குப்பிறகு அவர் தம்பி அநந்தனென்பவர் பட்டத்திற்குவந்து 53 வருஷம் ஆண்டார். அநந்தனது குமாரர் கலஸன். அவர் பட்டத்திற்குவந்து 78 வருஷம் ஆண்டார். கலஸனுடைய மகன் ஸ்ரீ ஹர்ஷன். கலஸனுக்குத் தமது குமாரனுடைய நடத்தை சரிப்படாமலிருந்தபடியால் தான் இறந்துபோகும்பொழுது தமது ராச்சியத்தை உத்கர்ஷன் என்ற ஒரு மந்திரியிடம் ஒப்புவித்தார். ஆனால் ஜனங்கள் அதை விரும்பாமல் கலஸன் இறந்த 22-ம் நாளில் ஸ்ரீ ஹர்ஷனையே ராஜாவாக நியமித்துக்கொண்டார்கள். ஸ்ரீ ஹர்ஷன் காச்மீரதேசத்தரசனானது கி. பி. 1089-ம் வருஷம். அவ்வருஷம் முதல் 1101-ம் வருஷம் வரையில் இவர் ஆண்டுவந்தமையால் அக்காலத்திற்குள்ளாகவே தான் ரத்நாவலிமுதலான நாடகங்கள் இவராலியற்றப்பட்டிருக்க வேண்டும். ஸ்ரீஹர்ஷன் அநேக பாஷைகள் கற்றவர் என்றும், கவிகள் நாடாளும் அரசர்முதலியவர்களுக்குக் கற்பகத்தரு என்றும் அநேக ஆதாரங்களால் நமக்குத் தெரியவருகின்றது. சில அங்கிலேயர்கள், ஸ்ரீ ஹர்ஷன் ரத்நாவலிமுதலான கிரந்தங்களை எழுதினவரல்லரென்றும், தாவகர்முதலான சில கவிகள் அவைகளை எழுதி அரசனது பெயரை கிரந்தகருத்தாவாக வைத்தார்களென்றும் சொல்லுகிறார்கள். இது மிகவும் தப்பான அபிப்பிராயம். ஸ்ரீஹர்ஷன் ஆட்சிசெலுத்திய காலத்தின் கடைசிபாகத்தில் பல சண்டைகளில் சிக்கிக்கொண்டு கி. பி. 1101-வது வருஷம் ஒரு யுத்தத்தில் மாண்டார். இவருடைய தாயார் பெயர் சூரியவதி; இந்த அம்மாள் தனது குமாரன்மேல் அதிக பிரீதி பாராட்டினவளாதலால் அவனிறந்துவிடவே சகிக்கக்கூடாத துக்கத்தில் முழுகினவளானாள். இவள் மனக்கவலையைமாற்றுவதற்காகவே சோமதேவர் கதாஸரித்ஸாகரத்தை எழுதினது. இரத்நாவலி நாடகத்தில் பிராகிருதபாஷையின் அழகு மிகவும் அதிகம்.

தன்னுயிரைப்போல மன்னுயிரை நினை.

(தொடர்ச்சி.)

அரசனுடைய சங்கேதப்படியே சுமதிக்குப்பதிலாகச் சுமுகி அங்கிரசு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றாள். நாம் இவ்வளவு செய்தும் வல்லபனுக்கு உயிர் தங்குமோ தங்காதோவென்று பயந்து சன்னியாசி சிறைச்சாலைக்குச்சென்றான். இவன் அவ்விடம்

சென்றது அந்த வல்லபனுடைய பாக்கியமென்றே சொல்லவேண்டும். ஏனெனில் அங்கிரசு தன் காரியத்தைமட்டும் சரிவர நடத்திக்கொண்டு வல்லபனைத் தான் முதலில் உத்தரவுசெய்திருந்தபடியே கொலைசெய்துவிடச் சிறைச்சாலைச் சேவனுக்குக் கட்டளை அனுப்பிவிட்டான். வந்த உத்தரவை அரசன்கண்டு திகைத்துச் சிறைச்சாலைச் சேவகனைப்பார்த்து, இந்த வல்லபனைக்கொலைசெய்யக்கூடாதென்றும், அன்றுகாலையில் சுரத்தால் இறந்துபோன ஒரு வியாதிக்காரன் தலையை வல்லபன் தலையென்று அங்கிரசுவினிடம் வெட்டியனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். இதற்குச் சிறைச்சாலைச் சேவகன் கொஞ்சமேனும் சம்மதிக்கவில்லை. ஏனெனில் அவன் சன்னியாசியைச் சன்னியாசியாகவே எண்ணினானேயல்லது அரசனாகவாவது அல்லது அரசனிடத்திலிருந்து உத்தரவுபெற்று வந்தவனாகவாவது எண்ணவில்லை. இப்படி இவன் தான் சொன்ன பேச்சைக்கேட்காமல் போகவே சன்னியாசி, வல்லபன் உயிரை ஒரு நாளும் வாங்கக்கூடாதென்று பெரிய அரசன் செய்த உத்தரவு அவர் முகருடன் தன்னிடம் இருப்பதாகவும், அதற்குப் பயந்து சேவகன் நடவாதபக்ஷத்தில் அச்சேவகன் உயிரைத் தான் வாங்கிவிடக்கூடுமென்றும் சொன்னான். அதைச் சிறைச்சாலை மனிதன் கேட்டுப்பயந்து நீர் அந்த உத்தரவைக் காட்டுவீரேயானால் நான் இந்த வல்லபனை அவர் திரும்பிவருகிறவரையில் காப்பாற்றிவைப்பேன் என்றான். உடனே சன்னியாசி சிறிதுதூரம் சென்று ஒரு காகிதத்தில் எழுதவேண்டிய உத்தரவை எழுதி, தானே அரசனுகையால் தான் மறைவாய் வைத்திருந்த முகரை அதில்பதித்து அதை ஒரு உறையில் போட்டுச் சிறைச்சாலைச் சேவகனிடம் கொண்டுவந்து கொடுத்தான். அப்பத்திரிகையைக் கண்டதும் சேவகன் நடுங்கி, இவனை அரசனுடைய தூதனுக எண்ணிச் செத்தவன் தலையைவெட்டி அங்கிரசுவுக்கு அனுப்பிவிட்டு வல்லபனைக் காப்பாற்றிவைத்தான்.

இவ்விதமாகச்சிறைச்சாலையில்ஒரு உயிரைக் காப்பாற்றினபிறகு அரசன், தான் தேசாந்தரம்போகச் சில சங்கடங்களால் சரிப்படவில்லையென்றும், மறுநாள் காலையில் துண்டீரநகரத்துக்கு வந்து சேருவனென்றும், அங்கிரசு அப்பட்டணத்து முதல்வாசற்படியிலே தன்னைவந்துபார்க்கவேண்டுமென்றும், அந்த ஊரார்கள் தங்களுக்கு ஏதாவது குறைகள் உண்டானுல் வந்து சொல்லிக்கொள்ளவேண்டுமென்றும் ஒரு கடிதத்தைத் தன் பிரதிநிதிக்கு எழுதினான்.

பொழுது விடியுமுன்னமே சுமதி சிறைச்சாலைக்குச் சென்று தன் தமையன் வல்லபன் பிழைத்திருக்கிறானவென்று விசாரிக்க, அங்கு இவளுக்காகவே தனது சன்னியாசி வேஷத்தைக் கலைக்காமல் நின்ற அரசன், வல்லபன் சுவர்க்கத்திலிருக்கிறான், அவன் தலையை நடுராத்திரியிலேயே வெட்டி அங்கிரசுவினிடம் அனுப்பிவிட்டார்கள் என்றான். பெண்கள் சிகாமணியாகிய சுமதி அதுகேட்டுக் கீழே

விழுந்து, தன் தமையனுக்காகத் தான் செய்த உபாயம் ஒன்றும் பலிக்காமல்போனதைப்பற்றியும், சன்னியாசி சொன்ன சொல்லும் பொய்யாய்ப் போனதைப்பற்றியும் புலம்பினாள். அதற்கு அரசன், அவளுக்குத் தைரியம் சொல்லிப் பொழுதுவிடிந்தவுடன் அரசன் வரப்போகிறார், அவரிடம் உன் பிரியாதைச் சொல்லிக்கொள்ளுவாயேயானால் உனக்கு நியாயம் கிடைக்குமென்று உபதேசித்து, சுமுகி வீட்டிற்குச் சென்றான். அவளுக்கும் நடந்துகொள்ளவேண்டிய விஷயத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டுப் பட்டணத்திற்கு வெளியே போய்விட்டான்.

ஊரைவிட்டு வெளியே போனதும் தன் சன்னியாசி வேஷத்தை மாற்றி அவ்வுடைகளைத் தன் வேலைக்காரனிடம் ஒப்புவித்துத் தனது உண்மையான இராஜவேஷம்பூண்டு பட்டணத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான். இவன் வரப்போகிற சமாசாரத்தைக் கேட்டுக் களித்து அந்த ஊர்ச்சனங்களெல்லாம் அவனை எதிர்கொண்டு அழைக்க அப்பட்டணத்து முதல்வாசற்படியிலேயே வந்து காத்துக்கொண்டிருந்தார்கள். தங்கள் பழைய அரசனைக் காணவே அவர்களுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அங்கிரசுவும் அவ்விடம் வந்து தனது அதிகாரத்தை அரசனிடம் ஒப்புவித்தான். இப்படி இருக்கையில் சுமதியென்னும் பெண்பிள்ளை தனக்கு ஓர் பிரியாது இருக்கிறதென்று அரசன்முன் வந்துநின்று, நியாயத்தின் அவதாரமே, என் அரசே, நான் சொல்வதைச் சற்றுக் காதுகொடுத்துக் கேட்கவேண்டும். நான் வல்லபனென்னும் ஒரு பாவியின் தங்கை. அவன் தான்செய்த குற்றத்திற்காகக் கொடிய தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான். அவனை விடுவிக்கும்பொருட்டு நான் எவ்வளவு வேண்டியும் அங்கிரசு அரசன் கேட்காமல், நான் அவனது காமவேட்கைக்கு உட்பட்டால் என் தமையனைக் காப்பாற்றிக்கொடுப்பதாகச் சொன்னான். அதன்பேரில் என் தமையனுக்காக நான் என் மானத்தை இழந்தேன். ஐயோ! இந்தப்பாவி என் மானத்தைமாத்திரங் கெடுத்துவிட்டானேயன்றித் தான் சொன்னவாக்கைக் காப்பாற்றவில்லை; என் தமையனைக் கொன்றுவிட்டான் என்று கண்ணும் கண்ணீருமாய்ப் புலம்பிக்கொண்டு நின்றாள். அதை அரசன் கொஞ்சமேனும் நம்பாதவன்போல இவள் சொல்வது என்னவென்று அங்கிரசைக் கேட்க, அதற்கு அந்த மகாபிரபு, தமையன் இறந்ததனால் இவளுக்குப் பித்தம் மேலிட்டிருக்கிறதுபோலத் தோன்றுகிறதென்றான். இதற்குள் சுமுகி என்பவள் ஓடிவந்து பெருமை தங்கிய மகாபிரபுவே, ஆகாயத்தில் சூரியன் உதித்தாற்போலும், சுபாவத்தில் உண்மை யுதித்தாற்போலும், உண்மையிற் புத்தி யுதித்தாற்போலும் விளங்கும் என்அரசே, இவள்சொல்வது பொய். இவள் மானத்தைஎன்றையதினம்அங்கிரசு அழித்ததாகச்சொல்லுகிறுளோ, அன்றையதினம் நான் அவருடன்இருந்தேன். இவைகளுக்கெல்லாம்

சாக்ஷி பரமயோகி என்னும் ஒரு சன்னியாசி என்றாள். இந்தப்பேர் அரசன் தான் சன்னியாசிவேஷம்பூண்டபொழுது வைத்துக்கொண்டது. இப்படி இவர்கள்கூறினதும் அவன் சொல்லிப்போனபடியேயன்றிவேறல்ல. இவைகளைக்கொண்டு சுமதியின்நடத்தையின் சுத்தமும் நற்குணமும் அரசன் சனங்களுக்குக்காட்ட நினைத்தான். ஆனால் இவ்விதமாகத் தன்துர்நடத்தையை வெளிப்படுத்த இம்மூவர்களும் ஒன்றுசேர்ந்திருக்கிறார்கள் என்பது அங்கிரசுவுக்குச் சிறிதும்தெரியாது. இவ்விருவர்களும் சொல்வதில் இருந்த வித்தியாசத்தைக்கண்டு அங்கிரசு தான்தப்பித்துக்கொள்ள வழிபார்த்தான். "நான்இதுவரையில் சிரிப்பாய்ப்பொறுத்துக்கொண்டிருந்தேன், இனிச்சும்மாஇருப்பது சரியல்ல; இவர்களை யாரோ என் பெயரைக் கெடுக்கும்படி ஏவிவிட்டிருக்கிறார்கள்" என்று அங்கிரசு சொல்லவே, அதற்கு அரசன் தருமபாலன் என்னும் பிரபுவைப்பார்த்து, ஐயா, நீங்கள் அங்கிரசு என்பவனுடன்கூட உட்காந்து இவர்மேல் வந்திருக்கும் குற்றத்தை விசாரியுங்கள். நான் வெளியேபோய் அந்தச் சன்னியாசியைக் கண்டுபிடித்து வருகிறேனென்று சொல்லி வெளியே சென்றான்.

அதுகேட்டு அங்கிரசு தன்மேல்வந்த குற்றத்தைத் தானேவிசாரிக்கவந்ததே என்று மிகவும் மனமகிழ்ந்து, அரசன் திரும்பிவருமுன் விசாரித்துமுடிக்க அவ்விரண்டு பெண்களையும் தன்முன் வரவழைத்து, அவர்களைச் சில கேள்விகள்கேட்க ஆரம்பித்தான். தருமபாலன் அங்கிரசு குற்றமற்றவனென்றும், சன்னியாசி யொருவன் பேச்சைக் கேட்டு இந்தப் பெண்கள் இப்படி நிந்திக்கிறார்களென்றும் எண்ணிக்கொண்டிருக்கையிலேயே சன்னியாசியும் அங்குவந்து தோன்றினர். அவரைக்கண்டதும் தருமபாலன் "நீங்களா அங்கிரசு பிரபுவைத் தூஷிக்கும்படி இவ்விரண்டு பெண்களையும் ஏவிவிட்டது என்றுகேட்க, அதற்கு அவன், அரசனெங்கே? அவருடன் பேசவேண்டுமேயல்லாது உம்முடன் நான் பேசவரவில்லை" என்றான். அதற்குத் தருமபாலன், இந்தச் சங்கதியை விசாரிக்க அரசன் எங்களுக்கு உத்தரவு செய்துபோயிருக்கிறார், சொல்லும் என, அதற்குச் சன்னியாசி, இந்தக் குற்றத்தை உங்களிடம் விசாரிக்கும்படி அரசன் எப்படி விட்டார்? நான் இந்த ஊரிலே கொஞ்சநாளிலேயே எவ்வளவோ குற்றங்கள் கண்டுபிடித்து அவைகளை வாய்விட்டுப் பேசினேன். அதற்குத் தருமபாலன் என்பவர் என்னைச் சிறைச்சாலைக்கு அனுப்புவதாகச்சொன்னார் என்று சொல்லித் தன் சன்னியாசி வேஷத்தைக் கலைத்து அரசனாகத் தோன்றினான். இப்படி இவன் ஆனது கண்டு முதலில் நடுங்கினது அங்கிரசுவே. அச்சபையிலிருந்த மற்றவர்கள் அனைவரும் என்ன நடக்குமோவென்று பிரமித்து நின்றார்கள். அரசன் குணவதியாகிய சுமதியைப்பார்த்து "என் பெண்ரத்நமே, உன் சன்னியாசி இப்பொழுது உன் அரசனாக மாறிவிட்டான். ஆனால் இன்னும் உனக்கு உபகாரம்செய்ய விரும்புகிறான். உன்

குறை என்னவென்று கேட்க, அதற்கு அவள், நான் என் தாழ்ந்த நிலைமையிலிருந்துகொண்டு தங்களை இன்னாரென்று அறியாமல் செய்துவந்த பிழைகளைப் பொறுப்பீர்களாக" என்று கேட்டுக்கொண்டாள். அதற்கு அவன், வல்லபன் இன்னும் பிழைத்திருக்கிறான் என்பதைக் காட்டிக்கொள்ளாமல், என்னசெய்தும் உன் தமையனைக் காப்பாற்றக் கூடாமல்போய்விட்டதே என்று வருத்தப்பட்டான். இதற்குள் அங்கிரசுவுக்குத் தான்செய்த ஒவ்வொரு சங்கதியையும் அரசன் மறைவிலிருந்து அறிந்துகொண்டதாகத் தெரியவே, அவன் அவர் காலில்விழுந்து நான்செய்த குற்றங்களைப்பற்றி இங்கு விசாரித்து என் கெட்டுப்போன மானத்தை இன்னும் கெடுப்பானேன். இந்த க்ஷணமே எனக்குக் கொலையை விதித்து என்னைத் தண்டியுங்கள். நான் செய்யும் பாவத்தை ஒருவரும் பார்க்கமாட்டார்கள் என்றிருந்தேன். ஈச்வரரூபமாய் நீங்கள்பார்த்துவிட்டீர்களே என்றான். அதற்கு அரசன் "உன் குற்றங்களெல்லாம் நன்றாய்த்தெரிந்துவிட்டது. வல்லபனுக்கு நீ விதித்த தண்டனையை நான் இப்பொழுது உனக்கு விதிக்கும்படியாயிற்று என்றுகூறி, சுமுகியைநோக்கி, இவனைவிட நல்ல புருஷன் உனக்கு வேறொருவன் கிடைக்கமாட்டானா என்றான். அதற்குச் சுமுகி, "எனக்கு இவர் கிடைத்தால் போதும், எனக்கு மங்கலியப்பிச்சை கொடுங்கள்" என்று அரசன் காலில்விழுந்து அங்கிரசுவின் உயிரைப் பிச்சைகேட்டாள். அங்கிரசு காலில் சுமதி விழுந்து வல்லபன் உயிரைக் கேட்டதற்குப் பதிலாக அந்தக் கொடும்பாவியான அங்கிரசுவின் உயிரையே அவன் பெண்சாதி பிச்சை கேட்கும்படியாய் முடிந்தது. பின்பு தான் செய்வதுமாத்திரம் போதாதென்று சுமுகி சுமதியைப்பார்த்து "தாயே நீயும் அரசன் காலில் விழுந்து என் புருஷன் பிராணனை இரக்ஷித்துக் கொடுப்பாயாக" என்று கேட்டுக்கொள்ள, அவளும் தன் மானத்தைக் கெடுக்க முதலில் நினைத்த கொடும்பாவியாகிய அங்கிரசுவுக்கிரங்கி அரசன் காலில்விழுந்து அங்கிரசுவை விடுவிக்கக் கேட்டுக்கொண்டாள். இதற்குத் தகுந்த உத்தரம் சொல்லுமுன் சிறைச்சாலையிலிருந்த வல்லபனை அரசன் வரவழைத்துச் சுமதியை நோக்கி, என் பெண்மணியே, உன் கையை நீட்டு; உன் நற்குணங்களுக்கு நான் தாஸனாய்விட்டேன்; இதோ உன் தமையனைக் கொலைசெய்யாமல் காப்பாற்றி வைத்திருந்தேன். இன்றுமுதல் நீ எனக்கு ராணியாகி உன் தமையனையும் என் தமையனாய்ப்பண்ணு என்று சொல்லி அவளைத் தன் சிங்காதனத்தில் தூக்கிவைத்துக்கொண்டான். உடனே அங்கிரசுவைப்பார்த்து, நீ கொண்ட எண்ணங்கள் கெட்டவைகளாயிருந்தபோதிலும் உன்னைச் சுமுகி என்னும் பெண்மணி நிமித்தம் மன்னிக்கிறேன். அவளுக்காக உன்உயிரை நான் இப்பொழுது திருப்பிக்கொடுக்கிறேன். நீ கொஞ்சகாலம் அதிகாரத்திலிருக்கும்போது உன்னுடைய இருதயம் எவ்வளவு கடினமாயிருந்தது!

இனிமேலாவது தயைதாக்ஷிணியம் என்பதை நீ அறிஎன்று சொல்லி அவனை விடுதலைபண்ணினன். அதே நிமிஷத்தில் அரண்மனையில் மூன்று கலியாணங்கள் நடந்தன. வல்லபன் என்பவன் நீலாட்சியையும், அரசன் சுமதியையும், அங்கிரசு சுமுகியையும் கலியாணம் செய்துகொண்டார்கள். சுமதி காவித்துணியைக் கட்டிக்கொள்ளாமலிருந்தபடியால் அரசனைக் கலியாணம்செய்துகொள்ள யாதொரு தடையுமில்லாமல் இருந்தது. தனது நற்குண நற்செய்கைகளினால் அந்நாட்டிலுள்ள பெண்டுகளையெல்லாம் அவள் சீர்திருத்திவைத்தாள். நீலாக்ஷியைப்போலப் பெண்கள் தங்கள் பிறந்த வீட்டைவிட்டு ஓடிப்போய்விடவாவது, வல்லபனைப்போலப் புருஷர்கள் சிறையில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கவாவது சிறிதும் இடமில்லாமற்போயிற்று. தயாநிதியான அந்த அரசனும், நற்குணமுள்ள சுமதி என்னும் பெண்ணைத் தன் பெண்சாதியாகப்பெற்று நீடூழிகாலம் சுகித்துவாழ்ந்திருந்தான்.

"நாம் பிறருக்களப்பதுதான் நமக்கும் அளக்கப்படும்."

வெவ்வேறு ஜாதி ஜந்துக்கள் பேதமில்லாமல் நேசிக்கும் விசித்திரங்கள்.

சாதாரணமாய் வீட்டுவளர்ப்பு ஜந்துக்களான நாய்களும் பூனைகளும் அறிவுள்ளவைகளாய், பிரீதியாயும் மனக்களிப்பாயும் அந்நியோந்நியமாயுமிசைந்து, சண்டையில்லாமல் ஒத்து ஜீவிக்கின்றன. இப்படியிருக்க மனிதஜாதியில் தம்பதிகள்கூட ஒருவருக்கொருவர் இணங்காமல் எப்பொழுதும் இரண்டுபட்டுக்கொண்டே பகையாளிபோல எப்பொழுதும் போராட்டமும் மல்லாட்டமுமாயிருப்பதற்குக் காரணம் என்னவோ விளங்கவில்லை. மதுரையில்ஒரு பூனை பெரிய வேட்டைநாய் ஒன்றோடு சாப்பிட்டுக் கூட வளர்ந்து வந்தது. மாறான குணங்களையுடைய இரண்டு வேறுஜாதி மிருகங்கள் அந்நியோந்நியமான நேசர்போல இணங்கியிருந்தன என்று ஒரு ஜமீன்தாருக்கு மிகவும் நம்பிக்கையுள்ள ஒருவர் சொல்லியிருக்கிறார். இவ்விதமான சிநேகங்கள் மிருகங்களில் எண்ணிறந்தன. ஒருவர் வீட்டில்அதிகமாய்ப் பழகின முதலையொன்றும் பூனையொன்றும் இவ்விரண்டும் வெகுநாளாய் வளர்ந்துகொண்டிருந்தன. முதலை மெத்தைக்கும் கிழக்கும் அவரோடு அலைந்துகொண்டேயிருக்கும். அவாது பூனையிடத்தில் மிக அன்புகூர்ந்து அது போனவிடமெல்லாம்கூடப்போய் அதன்மேல் தன் தலையை வைத்துக்கொண்டு உறங்கும். விழித்துக்கொண்டதும் பூனை அருகில் இருக்கிறவரையிலும்

சந்தோஷமாயிருந்து அது தன்னைத் தனியாக விட்டுப்போனால் கடுகடுக்கும். மிகவும் புகழ்ச்சிபெற்றதான ஒரு அராபிக்குதிரையை ஒரு பூனை நேசித்துச் சந்தோஷமாயிருந்ததாகச் சொல்லுகிறார்கள். மேற்சொன்ன அராபிக்குதிரையோடு ஒரு கறுப்புப்பூனை மிகவும் நேசமாயிருந்துகொண்டிருக்கையில் ஒருநாள் அந்தக்குதிரை இறக்க, பூனை மிகவுமுருகி அப்பிணத்தைவிட்டு நகராமல் அதைப் புதைத்தபிறகு மெல்ல மெல்ல ஒரு வைக்கோல்போருக்கு நகர்ந்துபோய் மிகத்துயரத்தால் நாளுக்குநாள் தேகம் மெலிந்து கடைசியாகத் தானும் இறந்தது. இவ்வண்ணமே பல குதிரைகளும் பூனைகளும் ஒன்றுக்கொன்று நேசமாயிருந்ததாகப் பல கதைகள் கேள்வியுற்றிருக்கிறோம்.

இராணியார் குதிரைலாயத்தில் ஒரு குதிரையும் பூனையும் ஒன்றின் பக்கத்திலொன்று பக்ஷமாயிருந்து நேசிக்கும் வேடிக்கையைப் பார்த்தவர் ஒரு புதுமையாகச் சொல்லியிருக்கிறார். அதற்கு உதாரணமாக ஒரு பெரிய அரமனைக்குதிரைலாயத்தில் பூனையும் குதிரையும் நேசித்து வளர்ந்துவந்தன. அந்த லாயத்தில் இரண்டும் படுக்க இடமில்லாமையால் குதிரை பூனைக்கு ஒரு அசௌக்கியமும் நேராமலிருக்கும்படி தான் நின்றுகொண்டே தூங்குமாம். குதிரைலாய விசாரணைக்காரர்கள் அதனால் குதிரைக்குச் சவுக்கியக்குறைவு வரும் என்றெண்ணி அதற்குச் சௌக்கியம்தேட வேறுவகை தெரியாமல் பூனையை அவ்வூரைவிட்டு வெளியே அடித்துத்துரத்திவிட்டார்கள்.

ஒரு ஜமீன்தாரிடத்தில் நல்ல ஜாதிக்குதிரையொன்றும் வெள்ளைப் பூனையொன்றும் இருந்தன. பூனை தினந்தோறும் குதிரைலாயத்திற்குப் போய் அங்கிருக்கும் சுண்டெலிகளை வேட்டையாடிப் பின்பு சுகமாய்த் தூங்கும். இப்படியிருக்க அந்த ஜமீன்தார் குதிரையுடன் வேறோரிடத்திற்குக் குடிபெயர்ந்தார். பூனை குதிரையைவிட்டுப்பிரிந்ததனால் ஓயாமலிரைச்சலிட்டு முறுமுறுக்கவே, அதையும் குதிரை போனவிடத்திற்கு அனுப்பிவிட்டார்கள். அங்கே போனவுடன் அது தன் இஷ்டங்களைத் தெரியப்படுத்த ஒருவனைத் தேடிக்கொண்டிருக்க, இதனுடைய எஜமானன் இதன் விருப்பத்தை அறிந்துகொண்டு குதிரை இருக்கிறவிடத்திற்கு அதை அழைத்துக்கொண்டுபோக, அந்தப் பூனை எஜமானனைவிட்டுக் குதிரை அருகிற்போய் அதன் பக்கத்தில் சுருட்டிக்கொண்டு படுத்தது. மறுநாள் காலையில் அந்த ஜமீன்தார் வந்து பார்க்கும்போது குதிரையும்பூனையும் அதன் குட்டிகள்ஐந்தும் இவைகளெல்லாம் லாயத்தில் நிச்சிந்தையாயிருக்கக்கண்டான். குதிரையோ தன் சமீபத்தில் இருக்கிற பூனைக்குட்டிகள்மீது கவனம்வைத்து அவைகளை மிதித்துப்போடுவோமோ என்று பயந்து ஜாக்கிரதையாய் நடமாடும். சற்றுநேரத்துக்குப் பின்பு பூனை தனது நேசனாகிய குதிரை குட்டிகளைப் பார்த்துக்கொண்டிருக்கும் என்று

நம்பி விட்டுவிட்டு வெளியே போகும். அது போனவுடன் குட்டிகளைக் குதிரை கண்காணித்துக்கொண்டிருக்கும். பூனையோ தன் குட்டிகள் இருக்கும் இடத்திற்குச் சிறுவர்களாவது வேற்றுமனிதர்களாவது வந்தால் சாதாரணமாய் மிகக்கவலையோடும் பயத்தோடும் இருந்தபோதிலும், குதிரை தன் கண்ணுக்குமுன்பாகவே குட்டிகளைப் பார்வையிடுவதில் கொஞ்சமேனும்பயப்படவுமில்லை, கவலைப்படவுமில்லை.

மற்றோரிடத்தில் ஒரு பூனை தனது குட்டிகளை இழந்துவிட்டுக் கோபத்தோடும் விசனத்தோடும் இருக்கும்பொழுது, தன்க்கு ஆகாரமாக ஒரு சிறுவன்போட்டுப்போன ஒரு கறுப்புப்பக்ஷியை மிக அன்போடு வளர்த்து அதைவிட்டுப் பிரியாமல் அன்னையைக்காட்டிலும் அதிக ஆதரவாய்ப் பாதுகாத்துவந்தது. மற்றோரிடத்தில் ஒரு பூனையும் சுண்டெலிகளும் ஒரு கூட்டில் அடைக்கப்பட்டிருந்தன. நாள்வரிசையில் எலிகள் பூனையோடு நேசம்கொண்டு அதை இழுக்கிறதும் மெல்லக் கடிக்கிறதுமாயிருக்க, பூனை கோபங்கொள்ளாமல் அதிகமாய்த் தொந்தரவுசெய்கிறபொழுதுமாத்திரம் மெல்லக் கன்னத்தில் அடிக்கும்.

ஒரு கனவான் ஊர்க்குருவியொன்றை வளர்த்துப் பூனையிடம் காப்பாற்றும்படியாக விட்டுவைக்க, பூனை குருவிக்கு ஜன்மவிரோதியாயிருந்தும், அதற்கொரு தீங்கும் செய்யாமலிருந்தது. ஒருநாள் மற்றொரு பூனை அதைவந்து தகைய, அதைக்கண்டு அந்தப்பூனையை அடித்துத்துரத்திவிட்டு மிக அன்பாய் அதற்கு யாதொரு சங்கடமும்வராமல் அது பாதுகாத்துக்கொண்டிருந்தது.

இரண்டு குதிரைகள் தண்ணீர்குடிக்கப் போய்க்கொண்டிருக்க, அவைகளில் ஒரு குதிரையோடு நேசித்திருந்த பூனையானது பின்தொடர, அப்பொழுது அதைக்காட்டிலும் பலமுள்ள ஒருநாய் வந்து அதைத்தகைய, அந்தப்பூனையின் நேசனாயிருந்த குதிரை அறுத்துக்கொண்டு நாயை நன்றாய் உதைத்து ஒரு தச்சன் கடையண்டை தள்ளிவிட்டு மறுபடியும் தண்ணீர் குடிக்குமிடத்திற்குப்போயிற்று.

இன்னுமோரிடத்தில் ஒரு நாய் மிக்க அறிவைத் தோற்றச்செய்யும் விதமாய்த் தன் எஜமானியின் குதிரையிடத்திலிருந்த அன்பைக் காண்பித்தது. ஒரு நாள் தனக்குப் பிரியமான குதிரை ஒன்று கீழே விழுந்து காயப்பட்டுச் சற்றுத்தேறினவுடன் முதல்தடவை வயலில் வேலைசெய்யப்போனபொழுது, அதன் எஜமானி சில கிழங்குகளையும் பழங்களையும் அது சாப்பிடும்படியாக அந்த வயலில் கொண்டுவந்து கொடுக்க, அதை எல்லாம் பார்த்திருந்த அவள் நாய் காற்றில் அடிபட்டு விழுந்த சில அத்திப்பழங்களைக் குதிரையிடத்தில் இருக்கிற பிரியத்தைக் காண்பிக்கிறதற்காகக் குதிரையின் முன்பாகப் பரப்பி அவற்றைப் புசிக்கச்செய்து, அது புசித்தவுடன் மிகவும் ஆனந்தித்தது.

குதிரைக்கும் நாய்க்கும் இவ்விதமான தோழமை சாதாரணந் தான். குதிரைகள் பெட்டைக்கோழிகளோடு நேசங்கொண்டு சந்தோஷமாயிருந்திருக்கின்றன என்பது நம்பக்கூடாத விஷயமாய் இருந்தபோதிலும், ஒரு குதிரை தனக்குச் சரியான தோழனில்லாமையினுல் ஒரு பெட்டைக்கோழியோடு நேசித்து, அது தன் காலைப் புரண்டுகிறதிலும் தன்னைப் பார்த்துக் கூவுகிறதிலும் மிகக் களிப்பை அடைந்திருந்ததென்றும், அந்தக் கோழியை மிதிக்கப்போகிறேமென்கிற பயத்தால் அதிகஜாக்கிரதையாய்த் தன் காலையசைக்கும் என்றும் நம்பிக்கையுள்ள ஒரு பெரியமனிதர் சொல்லியிருக்கிறுர்.

ஒருகால் ஒரு வேட்டைநாய் ஆண் பெண் வாத்துகளிரண்டில் ஆண்வாத்தைக் கொல்ல, அதன் கெட்ட காரியத்துக்குச் சிக்ஷயாக இறந்துபோன வாத்தை அந்தநாயின் கழுத்தில் கட்டிவிட்டார்கள். அந்த நாயின் கழுத்தில் கட்டப்பட்டிருப்பதைப்பார்த்துப் பெண் வாத்து நாய் போனவிடமெல்லாம் கூடத்தொடர்ந்துகொண்டிருக்க, அந்த நாய்க்கும் வாத்துக்கும் எவ்விதமாகவோ சமாதானம் உண்டாய்ச் சில நாள்களுக்குப்பின்பு அவை நேசர்களுமாகி ஒரே இடத்தில் சாப்பிடுவதும் படுப்பதுமாயிருந்தன. மேலும் நாய் வேட்டைக்காக வெளியேபோனுல் பெண்வாத்தானது அதன் பிரிவை ஆற்றக்கூடாமல் அலறும்.

இன்னேரிடத்தில் ஒரு நாயும் பன்றிக்குட்டியும் ஒரு ஆற்றங்கரையில் வசித்துக்கொண்டிருக்க ஒருநாள், எதிர்க்கரையில் நல்ல வேட்டைக்குத் தகுந்த இடங்களிருக்கின்றன, அங்கே போவோம் வாவென்று நாய் பன்றிக்குட்டியைக் கூப்பிட்டது. பன்றி, ஆற்றைத் தாண்டிவரவேண்டுமே! ஆறு இவ்விடத்தில்தான் ஏரியிலிருந்து வெளிப்புறப்படுகின்றது; ஆகையால் நீரோட்டம் வெகு வேகமாயிருக்கும்; நானே சிறுவன், எனக்கு வயது முற்றுகிறபரியந்தம் நான் ஆற்றைக் கடக்க எத்தனிக்கமாட்டேன்; முதிர்ந்தவுடன் உன்னேடுகூடத் திரியக்கூடும் என்றுசொல்ல, நாய் கழுத்துமட்டும் ஜலத்திலிறங்கிப் பன்றியைக் கழுத்தில் உட்காரவைத்து அதன் முன்னங்கால்களால் விழவொட்டாமல் தன் கழுத்தைக் கட்டிக்கொள்ளச்சொல்லி ஆற்றுக்கு அக்கரையில் கொண்டுவந்து விட, அவ்விடத்தில் இரண்டும் இரைதேடித்திரிந்து அந்தியில்முன் போனதுபோலவே திரும்பியும் ஆற்றைக்கடந்து தங்களிருப்பிடத்துக்கு வந்தன. இப்படியே வெகுநாள் செய்துவந்தன என்றும், நாய் என்றையதினமாவது பன்றிக்குமுன் வீட்டுக்குப்போகச் சித்தமாயிருந்தபோதிலும் அது வருகிறவரையிலும் காத்துக்கிடக்குமென்றும் பலர் தாங்கள் பார்த்ததாகச்சொல்லுகிறுர்கள்.

முசலுக்கும் நாய்க்கும் சுபாவமான விரோதமில்லையென்று கீழ்வரும் விருத்தாந்தத்தால் தெரியவரும்.

நாய் இன்னவிதமாக இருக்குமென்றறியாத ஒரு முசல், முசல் இன்னவிதமாக விருக்குமென்றறியாத ஒரு நாயைக்கண்டும், விரோதக்குறிகள் ஒன்றேனும் காண்பிக்காமல் இரண்டும் அந்நியோந்நியமாயும் நேசமாயும் இருந்தன. இவ்வித ஒருமைக் காரணங்களினால் நரிக்கும் நாய்க்கும் சுபாவமான விரோதமில்லையென்று ஊகிக்கக்கூடுமல்லவா? சாதுவான ஒரு நரி நாய்க்கூட்டத்தோடு வேட்டைக்குப் போனதென்று நாம் கேட்டதில்லையா? இங்கே ஒரு மிட்டாதாரரிடத்தில் சாதுவான ஒரு நரி இருந்தது. அது நாயின் தோழமையில் மிகஆவல்கொண்டது. அந்த நரி வாத்துகளைத் தின்னவேண்டுமென்ற எண்ணத்தினால் அந்த வீட்டில் வாத்துகளிருக்கும் நடைக்குப்போக அங்கே புல்தரையில் நன்றாய்க் கட்டுண்டது. அப்பொழுதுகூட எதாவது ஒரு நாய் தன்முன் வந்தால் உடனே தன் காதுகளைப் பின்செலுத்தி வாலையாட்டி தான் இருக்கிறவளவு அச்சமின்றி முன்வந்து தான் அந்த நாய்மேல் ஆசை வைக்காதிருந்தபோதிலும் அதைப் பலவிதமான யுக்திகளினால் விளையாடக் கூப்பிடும்.

ஓரிடத்தில் ஒருவருடைய லாயத்தில் சில வெள்ளைஎலிகள் வலையில் அகப்பட்டுக்கொண்டன. அவர் தோழர் ஒருவர் அந்த எலிகளில் சிறிதான ஒன்றின்மேல் ஆசை கொண்டு அதைவளர்க்க யத்தனித்துச் சீக்கிரத்தில் அதற்கு ஒரு செல்லப்பெயரும் கொடுத்தார். பிறகு ஒரு நாயினிடத்தில் காப்பாற்றும்படி அதை ஒப்புவிக்க, நாய் சுபாவமாய் எலிக்கு விரோதியாயிருந்தபோதிலும் அதை வளர்ப்பெலியென்றறிந்து அதற்கு ஒரு தீங்கும் செய்யாமல் பலவாறு துன்பங்களினின்றும் நீக்கிக் காப்பாற்றத் தொடங்கிற்று. எவனாகிலும் வேற்றுமனிதன் அதன் அறைக்குள் வந்தால் எலியை மறைத்துவைத்துத் துன்பப்படுத்த எண்ணமில்லையென்று தெரிகிறவளவும் அவனைப்பார்த்து உறுமிக்கொண்டும் அவனைக் கடிக்கிறது போலப் பல்லைக்காட்டிக்கொண்டுமிருக்கும். இப்படி ஆச்சரியகரமாய் ஒத்துப்போன சிநேகிதர்கள் ஒரேபாத்திரத்தில் சாப்பிட்டுக்கொண்டும் ஒன்றாய்த் தோட்டத்தில் விளையாடிக்கொண்டும் இருந்தன. எப்பொழுதெப்பொழுது நாய் தூங்குமோ அப்பொழுதெல்லாம் நாயின் இரண்டு கால்களுக்கு நடுவில் எலி பதுங்கிக்கொண்டிருக்கும். நாயோ சாப்பிடுகிற மேஜையின்மேல் எலி தாவிக்குதித்து அங்கிருந்து கொண்டுவரும் திண்டிகளைத் தின்னக் கீழே காத்துக்கொண்டேயிருக்கும். இப்படியிருக்க மற்றொருநாள் நாயும் எலியும் ஓடி விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது வலையில் அகப்பட்ட ஒரு எலியை அந்நாயின்முன்பாகக் கொண்டுவந்து உதறினார்கள். வலையிலிருந்து அந்த வெள்ளெலி கீழே விழுந்தவுடனே இரண்டு எலிகளைப் பூமியின்மேல் தன் முன்பாகப் பார்த்தநாய் இரண்டெலிகளும் ஒரே மாதிரியாயிருந்தும் புதிதாய் வந்த எலியை

வளர்ப்பெலி அல்லவென்றறிந்து கொன்றுவிட்டது. அவ்விடத்தை விட்டு அந்த மனிதன் செத்த எலியோடு வெளியே போகிறவளா யிலும் வளர்ப்பெலியை நாய் காப்பாற்றிக்கொண்டிருந்தது. அந்த எலியின் சொந்தக்காரர் வேருேரிடத்திற்குக் குடிப்போனபொ ழுது எலியையும் கூடக்கொண்டுபோய்விட்டார். போன ஒரு மாதத்திற்குள் எலி வெகுவாய்த் தான் நேசித்த நாயை விட்டுப் பிரிந்த துயரத்தினுல் தானே இறந்துபோய்விட்டது.

ஒரு நாயும் சிங்கமும் நேசமாயிருக்கிறது மிக ஆச்சரியமென்று சொல்லுகிருர்களாயினும் அத்தன்மையான சிநேகங்கள் அபூர்வ மல்ல. காடுகளில் அரசனுய்த் திரிந்துகொண்டிருக்கும் சிங்கம் வீட் டில் மனுஷியனுல் கட்டப்பட்டால் நாய்களுடன் விசேஷமாய்த் தோழமைகொண்டு ஒத்து வாழ்கிறது. சில நாளுக்குமுன்பு ஒரு மிருகாசயத் தோட்டத்தில் பெண்சிங்கம் ஒன்று நோயால் வருத் தப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது அங்கிருக்கும் எலிகள் அதைக் கடித்துத் தொந்தரவுசெய்ய அவைகளைத் துரத்த ஒரு நாய் கூட்டிற் குள் விடப்பட்டது. நாய் உள்ளே நுழையும்போது உறுமின சிங்கம் அது ஒரு எலியைப் பிடித்துக் கொல்லக்கண்டு தனக்குச் சகாயஞ்செய்ய வந்ததென்று எண்ணி அதனேடு நேசிக்க யத்த னித்தது. அதை நகைப்புகளால் இச்சகமாய்த் தன்பக்கத்தில் வர வழைத்துத் தன் மார்பில் அணைத்துக்கொண்டது. அதுமுதல் இராத் திரிதோறும் அந்த நாய் சிங்கத்தின் மார்பிலேயே படுத்துக்கொண்டு அதின் நித்திரையைக் கெடுக்கவரும் எலிகளைத் துரத்திக்கொண்டே யிருந்தது.

மற்ருெரு தோட்டத்தில் ஒரு கூட்டில் ஆண் பெண் இரண்டு புலிகளுடன் ஒரு நாய் சற்றேனும் அச்சமில்லாமல் பார்க்கிற வர்களுக்கு விநோதமாய்ப் பேதமில்லாமல் விளையாடிக்கொண்டிருந் தது. ஒருநாள் இரண்டு புலிகளும் ஒருயர்ந்த படுக்கையில் உறங்க ஆண்புலியின் வால் கீழே தொங்கிக்கிடந்தது. நாய்வேண்டுமென்று வாலைக்கடித்திழுத்தது.

அந்தப் புலி மிருதுவாய்க் கோபித்துக்கொண்டும் நாய்வாலை விடாமையினுல் ஒரு தடவை இரைந்து உறுமவே, அந்த நாய் உடனே வாலை விட்டுவிட்டு முதுகின்மேல் குதித்து அங்கேபடுத் துத் தூங்கிவிட்டது. இப்படி வெவ்வேறு ஜந்துக்களின்நேசம் விசித் திரமான வகையாய் இருந்தாலும், ஒவ்வொருசமயத்திலே 'தீயா ரைச்சேர்ந்து ஒழுகல் தீது' என்றபடி முடிவில் யமபாசம்போலா கும். அதெப்படி யென்ருல், ஒருசிங்கம், காடி, நாய் இம்மூன்றும் வெகுகாலம் நேசமாயிருந்துகொண்டிருக்கையில் ஒருநாள் அகஸ் மாத்தாய் நாயானது காடிக்குக்கோபம் வரும்படிசெய்ய, காடி நாயைக்கொன்றுவிட்டது. தன்தோழனுன நாயையிழந்த சிங்கமும் மிகக்கோபத்தோடு காடியைக் கொன்றுவிட்டது. துஷ்டசகவாஸம்

எப்பொழுதும் கெட்டதே என்பது வெகுவாய்த்தெரிந்த விஷயமேயல்லவா? இம்மிருகங்களுடைய நடத்தையையே நிதர்சனமாகக் கொண்டு கெட்ட சகவாஸத்தை விலக்கி நல்லாரோடிணங்கி அந்நியோந்நியமாய் ஒத்து வாழ்வது அனைவர்க்கும் கடமையாம்.

துரௌபதி சபதம் முடித்தல்.

(தொடர்ச்சி.)

போர்க்களத்து நடுவில் ஏதோ ஒரு பெருங்கூச்சலுண்டாக, அசுவத்தாமா அவ்விடம் நோக்கி விரைந்தோடினான் என முன் கூறினோமே. அவ்வாறு செல்லுகையில் கவுரவசேனை நாற்புறமும் முறிந்தோடக்கண்டு அவன், ஓகோ, இதென்ன? இதுவரையில் மகாராஜாவின் உப்பைத்தின்று உயிரைக் காப்பாற்றினோமென்பதைச் சிறிதேனுமெண்ணாமல், அவர்க்கு ஆபத்து நேர்ந்தகாலத்து உயிரைக் கொடுத்தாயினும் கட்டிக்காப்பதைவிட்டு, மானத்தைக் கைவிட்டுப் பிராணனையே பெரிதாய் எண்ணி மகாவீரர்கள் எனப் பெயர்பெற்ற இவர்களும் இப்படிப் பயந்தோடுகிறார்களே. கொள்ளு என்றால் வாயைத்திறப்பதும் கடிவாளமென்றால் வாயை மூடுவதுமா? அப்படித்தானென்ன, இவர்கள் சிரஞ்சீவியாயிருக்கப்போகிறார்களா? ஆறிலும்சாவு, நூறிலும் சாவுதானே; பிறக்கும்போது இறப்பும் உடனே பிறந்திருக்கின்றதென்பதை இவர்கள் அறியார்களோ? போர்க்களத்தில் பின்வாங்குவதைவிடப் பெரும்பழிப்பு வேறுண்டோ? ஜயித்தால் புகழுண்டு, மரித்தாலும் வீரசுவர்க்கமுண்டே. அதனிலும் நமது பிதா சேனாதிபத்தியத்தை வகித்திருக்கும்பொழுது இவ்வாறு ஆவதற்கு என்னநிமித்தம் என்றிப்படிப் பலவாறு சொல்லிக்கொண்டே சென்றான். செல்லும்பொழுது வழியில் ஓடிவந்த துரோணாசாரியருடைய சாரதியினால் அவர் உயிரிழக்கும்படிநேர்ந்த செய்தியைக்கேட்டுச் சோகத்தால் மூர்ச்சையடைந்து கீழேவீழ்ந்தான்.

அத்தருணம் கிருபாசாரியரும் அவ்விடம்வந்து சேர, அசுவத்தாமா பல சீதோபசாரங்களால் மூர்ச்சைதெளிந்து எழுந்து தந்தையை நினைத்துச் சிறிதுநேரம் புலம்பிப் பிறகு, சத்தியவாக்கு என்று தருமபுத்திரன் சொன்ன பொய்ப் பேச்சை நம்பி நான் இறந்துபோனதாயெண்ணிப் பிதா பிராணனை உடனே துறந்தாரே; அத்தன்மையான என் அருமைத்தந்தை உண்மையாகவே உயிரிழந்த பிறகு நான் பிராணனை வைத்திருப்பேனா? இதோ நானும் அவர் சென்றவழியே செல்லுகிறேனென்று கூற, கிருபாசாரியர் பலவிதமாக அவனைச் சமாதானப்படுத்தி, குழந்தாய் அப்படியன்று; பிதாக்களுக்குப் புத்திரர்கள் இவ்வுலகம் மேலுலகமென்னும் இரண்டி

னும் உதவிபுரிய உரிமைப்பட்டிருக்கின்றனர்; நீ பிழைத்திருந்து தர்ப்பணம்முதலியவைகள் செய்துவருவதே உன் பிதாவுக்கு நீ செய்யவேண்டிய பெரிய கடமையாம் என்று சொல்லித்தேற்றினர்.

அப்பொழுது, ஆ! ஆ! விசனத்தினுல் படைக்கலங்களை யெறிந்துவிட்டுப் பிராயோபவேசமாய்ப் படுத்துக்கொண்ட துரோணசாரியரைத் திருஷ்டத்தியும்னன் தலைமயிரைப் பிடித்திழுத்துக்கொண்டு கத்தியால் கழுத்தை அறுத்துவிட்டு ஓடுகிருனே! இந்த அக்கிரமத்திற்குக் கேள்வியில்லையா என்று ஒரு பெருங்கூச்சல்கேட்டது; அதைக் கேட்டவுடனே அசுவத்தாமா அதிக பௌருஷங்கொண்டு, அடே, திருஷ்டத்தியும்ன, உயிரைவிட்டுப் பிணமாய்ப்போன என் தந்தையை நீ நாய்நரிகளுக்கு ஒப்பாய்ப் பிடித்திழுத்தாய்; உயிரோடிருக்கையிலேயே நான் உன்னையும், இவ்வக்கிரமச் செய்கையைக் கண்ணுற்றிருந்த மற்றும் பல அரசர்களையும் அவ்வாறு பிடித்திழுத்துச் சித்திரவதைசெய்து என் துயரத்தைத் தணித்துக்கொள்கிறேன் என்று ஒரு அட்டகாஸம்செய்தான். அது கேட்டுக் கிருபாசாரியர், குழந்தாய், நீ இப்பொழுது பேசியது உன் சூரத்தனத்துக்குத் தக்கபடியேயிருக்கின்றது. ஆயினும் நீ சேனுதிபத்தியத்தை வகித்துக்கொண்டு பிறகு இவ்வாறு செய்வாயானுல் உன் மகிமைக்கு மிகவும் ஏற்றதாகும் என்று சொல்லி அவனையும் அழைத்துக்கொண்டு துரியோதனன் இருக்குமிடத்திற்குச் சென்றுர்.

இவர்களைக் கண்டவுடனே துரியோதனன் இவர்கட்கு ஏற்ற மரியாதைசெய்து ஆஸனங்களில் வீற்றிருக்கச்செய்து துரோணசாரியர் உயிரிழந்ததைப்பற்றி அசுவத்தாமாவுக்கு உபசாரஞ்சொல்லி, தனக்குப் பெருந்துணையாயிருந்தவர் இறந்துபோனது தனக்குக் கையொடிந்ததுபோலாகிவிட்டது என்று மிக்வும் விசனமடைந்துநின்றுன். அதுகண்டு அசுவத்தாமா நீ என்னிடத்தில் இத்தனை ஆதரவாயிருப்பதனுல் எனக்குத் தகப்பனுர் இறந்ததுக்கங்கூட மறந்துபோகின்றது; ஆயின் நாம் உயிரோடிருக்கையிலே பிதாவுக்கு இந்த விபத்து நேரிடலாயிற்றே என்பதை நினைக்கும்பொழுதுமாத்திரம் மனதுக்கு மிகத் துயரமுண்டாகின்றது என்றுன். அருகிலிருந்து அதைக்கேட்டிருந்த கர்ணன், அதற்கு யார் என்னசெய்வது? பகைவர்களை வெல்வதற்குப் பெருந்துணையான படைக்கலங்களை அப்பால் எறிந்துவிட்டால் போர்க்களத்திலுள்ளோர் சும்மா விடுவார்களோ என்று பரிகாசமாய்ப் பேசினுன். அதன்மேல் அவ்விருவர்க்கும் ஒன்றின்மேல் ஒன்றுய்ப் பேச்சுகள் வளரும்படியாயிற்று. பிறகு கிருபாசாரியர், இப்போது அசுவத்தாமாவுக்குச் சேனுதிபத்தியம்கொடுத்தால் இவனுக்கு இருக்கிற ஆக்கிரகத்தில் பகைவர்கள் அனைவரையும் ஒருநொடியில் அதஞ்செய்துவிடுவான் என்று கூற, துரியோதனன், நீர் உரைப்பது உண்மையே; ஆயினும் நான் முன்னமே கர்ணனுக்குப் பட்டாபிஷேகம்செய்வதாக வாக்குக்கொடுத்து

விட்டேனுதலின், சொன்னசொல்லை மறுபடி மாற்றுவது உசிதமல்லவே என்றான். அதைக்கேட்டதும் அசுவத்தாமா, நான் இதோ சென்று பாண்டவர்களை நொடிப்பொழுதில் பொடியாக்கிவிட்டு வருகிறேனென்று வீரவாதம்செய்ய, அதுகேட்டுக் கர்ணன், மகா மகா சூரர்கள்கூட உன்னைப்போல இவ்வாறு வீரவாதம் செய்யவில்லையே; ஏன் வீணாய்க் கூவுகிறாய்; பாண்டவர்களென்றால் என்ன கிள்ளுக்கீரை என்று நினைத்தாயோ என்றான். அதன்மேல் அவ்விருவர்க்குமே பெருங்கலகம் விளைந்து கைகலக்கிற தருணமாகிவிட்டது. கிருபாசாரியரும் துரியோதனனும் அவர்களை விலக்கிச் சமாதானப்படுத்த, அசுவத்தாமன், இனி நான் கர்ணன் சேனாபதியாயிருக்குமளவும் கையில் ஆயுதமெடுப்பதில்லையென்று பிரதிஞ்ஞை செய்து ஆயுதங்களை எறிந்துவிட்டான். கர்ணன் அதுகண்டு, நான் ஆயுதபாணியாய் எதிர்த்துச் செல்லும்பொழுது, நீ ஆயுதமெடுத்துச் செய்யவேண்டிய உதவி ஒன்றுமில்லை; நீ போர்க்களத்துக்கு வருவதும் வாராதிருப்பதும் இரண்டுமொன்றுதான் என்றான்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், பீமசேனன் துச்சாசனனைமடக்கிக்கொண்டு போர்செய்யத்தொடங்கினான் எனப் போர்க்களத்திநின்றும் பெருங்கூச்சலொன்று கேட்க, உடனே கர்ணன் எழுந்து, துச்சாசனனுக்குத் துணையாயிருந்து பீமசேனனை வதைக்கவேண்டுமென்று சொல்லிப்போய்விட்டான். அவனுக்குத் துணையாகத் துரியோதனனும் சென்றான். முன்சென்ற கர்ணன் துச்சாசனனுக்குச் சார்பாய்ப் பீமனுடன் அமர்புரிய, அர்ச்சுனன் துரியோதனனை மடக்கிக்கொண்டு அடித்து மூர்ச்சிக்கச்செய்துவிட்டுக் கர்ணனையெதிர்த்துச் சண்டைசெய்யச் சென்றான். இவ்வாறிருக்கப் பீமன், துச்சாதனன் உதிரத்தைக் குடிக்கப்போகிறதாகவும், அதற்குத் துரியோதனனையே ஸாக்ஷியாக்குகிறதாகவும் பெருங்கூச்சலிட, அதுகேட்டுக் கவுரவசேனையிலுள்ளோர் அனைவரும் நடுங்கி நின்றார்கள். அந்தச் சத்தத்தைக்கேட்ட அசுவத்தாமா, அய்யோ! நான் கர்ணன்மீது கோபத்தால் ஆயுதத்தைப் போட்டுவிட்டேன்; இத்தருணத்தில் அரசனுக்கு யாதும் உதவிசெய்யக்கூடாமல் போய்விட்டதேயென்று பச்சாத்தாபம்கொள்ள, கிருபாசாரியர் தான் அரசனுக்கு உதவிசெய்வதாய்ப் போர்க்களத்துக்கு விரைந்தோடினார். அசுவத்தாமா எழுந்து கூடாரம்போய்ச் சேர்ந்தான்.

பீமசேனன் முன்னே சபைநடுவில் பிரஞ்ஞைசெய்தபடி துச்சாதனன் உதிரத்தைக் குடிக்கவேண்டுமல்லவா? அவ்வாறுமனிதருதிரத்தைப் பருகுதல் பிசாசங்களின் செய்கையேயன்றி மனிதர்க்குத் தருமமல்லவே எனத்தேர்ந்து, அவனிடத்தில் அனுப்பிரவேசித்து இந்தச் செயலைச் செய்யும்படி இடிம்பி (பீமசேனன் மனையாட்டியான ஒரு ராக்ஷஸி) தன் வேலைக்காரனாகிய உதிரப்பிரிய னென்னும் பிசாசத்தைத் தன் கணவன்பின்னே அனுப்பிவைத்திருந்தாள். அவ்வண்

ணமே அதன் அனுப்பிரவேசத்தினாலே பீமன் துச்சாசனன் மார்பைக் கதையால் பிளந்து தான் முன் பண்ணின பிரதிஞ்ஞைப்படி ஒருகை உதிரத்தைக் குடித்துவிட்டு மற்றதை உடம்புநிறையப் பூசிக்கொண்டு நின்றான்.

மூர்ச்சைபோன துரியோதனன் நெடுநேரம் மூர்ச்சைதெளிந்தெழுந்திராமற்போகவே ஸாரதி அவனை ரதத்துடனே வேறுவழியால் போர்க்களத்தைவிட்டு வெகுதூரம் அப்பால் கொண்டுபோய்விட்டான்.

சிறிதுநேரம் கழித்து அரசன் மூர்ச்சைதெளிந்து, அடா, தம்பி! பயப்படாதே; இதோ நான் உன்னைப் பாதுகாக்கின்றேன் என்று சொல்லி, ஸாரதி, என் தேரைப் பீமன் சமீபத்திற் செலுத்து என, சாரதி, பீமன் பிரதிஞ்ஞை நிறைவேறிவிட்ட சங்கதியை விளங்கச் சொன்னான். துரியோதனன் அது கேட்டவுடனே சிறிது நேரம் கியாபகமே இல்லாமல் மூர்ச்சைபோய்க்கிடந்து, கியாபகம் வந்த பின்பு, தன் தம்பி பகைவன் கையில் சிக்கி ஆபத்தை அடைந்த சமயத்தில் தேரை அங்கிருந்து அப்பால் ஓட்டிக்கொண்டு வந்ததற்காகச் சாரதியின்மீது கோபங்கொள்ள, சாரதி, வேந்தே, தாம் மூர்ச்சையடைந்துவிடவே, சாரதி தருமப்படி நான் தேரை இப்பால் நடத்திவந்துவிட்டேன் என்று கூறினான். அரசன் அடடா, பகைவர் அம்பினால் நான் மூர்ச்சையடைந்ததுபோலே அவைகளினாலேயே மூர்ச்சை தெளிந்திருந்தால் நன்றாயிருக்குமே; என் பந்துக்களெல்லாம் இறந்துபோனபின்பு எனக்கு ராச்சியமேன், சுகமேன்; நானும் அவர்களுடன் மரித்துவிடுவதே நலம்! ஆனால் பீமன்கையினால்மாத்திரம் சாகக்கூடாது என்று சொல்லித் துக்கித்துக்கொண்டிருந்தான்.

இவனிப்படியிருக்கையில் கர்ணன் சேவகனாகிய சுந்தரகன் என்பவனொருவன் துரியோதனனைத் தேடிக்கொண்டு கடைசியில் அவனிருக்குமிடம் வந்து சேர்ந்தான். யுத்தபூமியிலிருந்து சுந்தரகன் வந்திருப்பதாகச் சாரதி அரசனுக்கு அறிவிக்க, துரியோதனன், சுந்தரகா, கர்ணன் க்ஷேமமாயிருக்கிறானா என்று கேட்டான். சுந்தரகன், இதுவரையில் தேகம்மட்டில் க்ஷேமந்தான் என்று உரைக்க, அங்கு நடந்தவைகளை விவரமாய்ச் சொல்லும்படி அரசன் கட்டளையிட, சுந்தரகன் சொல்லத்தொடங்கினான்:

துச்சாசனனைக் கொன்றதற்காகப் பீமன்மீது கர்ணன் கோபங்கொண்டு பெரும்போர் புரியத்துவக்க, அர்ச்சுனன் பீமனுக்குச் சகாயமாக வந்துசேர்ந்தான். அதைக்கண்ட விருஷஸேனன் (கர்ணன் புதல்வன்) கர்ணனுக்குச் சார்பாகவந்து அர்ச்சுனனுடன் யுத்தஞ்செய்யத் தொடங்கினான். அவனை அர்ச்சுனன் கண்டு, குழந்தாய் விருஷஸேனா, உன் தகப்பன்கூட என்னெதிர்நின்று போர்புரியச் சக்தியற்றவனாயிருக்க, நீ உனக்குத் தக்க சிறுபையல்களுடன் போர்

செய்யாமல் என்னிடம்வந்து சேர்ந்தாயே! அய்யோ, சிறுவனே, வீணே மடிந்துபோகாதே என்று இகழ்ந்துபேச, விருஷசேனன் கடுஞ்சினங்கொண்டு பெரும்போர்செய்து அர்ச்சுனன் சேனைகளில் பலரை மடித்து அர்ச்சுனன் சரீரமுழுதும் அம்புகளால் அடித்துப் புண்படுத்தினான். அர்ச்சுனன் வெகு கோபத்துடன் விருஷஸேனன் ரதத்தை முறித்து வில்லை அறுத்து அவன்மேல் பல பகழிகளைப் பொழிய, விருஷஸேனன் ஆயுதமொன்றுமில்லாதிருந்தும் கிறுகிறென்று சுழன்றுகொண்டேயிருந்து அர்ச்சுனன் பாணங்கள் ஒன்றுகூடத் தன்மேல் படஒட்டாமல் தப்பித்துக்கொண்டிருந்தான். அதுகண்டு கர்ணன் பீமனுடன் சண்டைசெய்வதைவிட்டு அர்ச்சுனன்மீது பாணப்பிரயோகம்செய்யலானார். அதற்குள் வேறுரதம் சித்தமாய் வந்துவிடவே விருஷசேனன் அதில் ஏறிக்கொண்டு முன்போலவே அர்ச்சுனனுடன் யுத்தம்செய்யத்தொடங்கினான். இருவரும் ஒருவர்க்கொருவர் உயர்வுதாழ்வு இன்றி வெகு விசித்திரமாக யுத்தம்செய்ய, அதைப் பார்க்கவேண்டுமென்று பீமன் கர்ணன் இருவரும் தாங்கள் யுத்தம் செய்வதைவிட்டு வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தார்கள். அர்ச்சுனன் தன் இருகைகளாலும் அநேகம் அம்புகளெறிந்து விருஷஸேனன் ரதமே தெரியாதிருக்கும்படி மறைத்துவிட்டுக் கர்ணனைக் கூவி, அடா கர்ணா, நான் இல்லாதகாலத்தில் நீங்கள் பலர் ஒன்றுகூடி என் குமாரன் அபிமன்னியுவைக் கொன்றீர்களல்லவா? இப்பொழுது உன் முன்னேயே நான் ஒருவனாய் உன் மகனைக் கொல்லுகின்றேன் பார். இப்பொழுது இவனுயிரைப் பாதுகாக்க உன்னாலாகுமா என்று சொல்லிக்கொண்டே விருஷஸேனன்மீது சரமாரிபொழிந்து கூரியதோர் அம்பினால் மார்பில் அடித்தான். ஐயோ! அந்த வேதனையைப் பொறுக்கமாட்டாமல் விருஷஸேனன் ரதத்தின்மேல் விழுந்து சுவர்க்கம்போய்ச் சேர்ந்துவிட்டான் என்று சுந்தரகன் சொல்லி அழுதான். அதைக்கேட்ட துரியோதனன் விருஷஸேனன் மடிந்துவிட்டதற்காக வெகு நேரம் துயரப்பட்டு, சுந்தரகா, பிறகு கர்ணன் என்னசெய்தான் என்று கேட்க, சுந்தரகன் சொல்லுகிறான்:

கர்ணன் தன் குமாரன் இறந்த துக்கத்தால் மதிமயங்கிக் கடுஞ்சினம்கொண்டு பார்த்தன்மீது ஓயாமல் சரமாரி பொழியத்தொடங்கினார். பீமன் நகுலன் சஹதேவன்முதலியவர்கள் அர்ச்சுனனுக்குத் துணையாக வந்து சூழ்ந்துகொண்டார்கள். சாரதியாகிய சல்யன் கர்ணனைநோக்கி, தமதுரதம் சிதிலமாயிருப்பதால் இப்போது பீமார்ச்சுனர்களுடன் இதிலிருந்து யுத்தம் செய்வது உசிதமல்ல என்று சொல்ல, கர்ணன் ரதத்தைவிட்டுக் கீழே இறங்கி வேறொரு ரதம் கொண்டுவரச்செய்து அதன்மேல் ஏறி யுத்தத்துக்குப் புறப்பட்டார். அப்போது அருகேயிருந்த என்னை அழைத்து, தம் உடம்பில் பெருகும் உதிரத்தாலேயெழுதி உங்களிடம் கொடுக்கும்படி இதை என் கையில் கொ

டுத்தார் என்று சொல்லித் தன் கையிலிருந்த காகிதத்தை அரச னிடம் கொடுத்தான்.

துரியோதனன் அதை வாங்கிப்படிக்க, அதில் "அப்பா, தோழ னே, நான் மகா பலசாலி, சத்துருக்களை ஜயிக்க வல்லவன் என்று நம்பி, உன் தம்பிகளைவிட அதிக ஆதரவாய் நீ என்னைக் காப்பாற்றி வந்தாய்; நானோ உன் தம்பியைக் கொன்ற பீமசேனனைக் கொல்லத் திறமையற்றவனாயினேன். இனி புஜபலத்தினாலாயினும், கண்ணீரா லாயினும் உனக்கு நேர்ந்த துக்கத்தை நீ போக்கடித்துக்கொள்ள வேண்டுமேயன்றி வேறுவழியில்லை" என்று வெறுப்பாய் எழுதி யிருந்தது. அதைப் படித்தவுடன் துரியோதனன், சுந்தரகா, இதை உன் கையில் கொடுத்த பிறகு அங்கராஜன் செய்தது யாதென, கவ சத்தைக் கழற்றிவைத்துவிட்டு யுத்தம்செய்யச் சென்றார் என்று சுந்தரகன் கூறினான். அரசன், சுந்தரகா, நீ விரைவில் சென்று "நான் இதோ வருகிறேன், இருவருமாய்ப் பாண்டவர்களைக் கொன்றுவிட்டு இறந்துபோன நமது பந்துக்களுக்குத் தர்ப்பணம்செய்து பிறகு துக் கத்தினாலாவது சந்தோஷத்தினாலாவது இருவருமாய்ப் பிராணனை விட்டுவிடலாம்" என்று நான் சொன்னதாகச் சொல் என்று சொல் லிச் சுந்தரகனைக் கர்ணனிடம் அனுப்பினான்.

சுந்தரகன் சென்றவுடனே திருதராஷ்டிரனும் காந்தாரியும் சஞ்சய னுடன் ரதமேறி அங்கு வந்தார்கள். தம்பி மடிந்துபோன துக்கத்தி னால் அவர்களைப் பார்க்க வெட்கி மறைந்துகொள்ளவேண்டும் என்று துரியோதனன் நினைத்தான்; அப்படிச்செய்வது அனுசிதம் என்று சாரதி தெரிவிக்கவே அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

திருதராஷ்டிரனும் காந்தாரியும் சஞ்சயனை நோக்கி, சஞ்சயா, துரியோதனன் உயிரோடு இருக்கிறானா? இருந்தால் அங்கே எங் களை அழைத்துக்கொண்டுபோ என, சஞ்சயன் அவர்களை அழை த்துவந்து, இதோ துரியோதனன் இருக்கிறானென்று காட்டினான். இருவரும் தேரைவிட்டிறங்கித் தடவிக்கொண்டேசென்று அரசனை அணைத்துத் தழுவினார்கள். அப்போதும் துரியோதனன் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருக்கவே, குழந்தாய், இப்படி நீ நம்மிடத் தில் மௌனமாய் இதுவரையில் ஒருநாளுமிருந்ததில்லையே; எங்க ளுடன் வார்த்தைசொல்லாமல் நீயே யிப்படி உபேக்ஷைசெய்தால் மற்ற துச்சாசனன் முதலியவர்களா எங்களை ஆதரிக்கப்போகிறார் கள் என்று கண்ணீர்பெருகப் பேசினார்கள்.

துச்சாதனன் என்ற பேச்சைக் கேட்ட துரியோதனன் மிக்க விசனமடைந்து மாதாபிதாக்களை நோக்கி, உங்கள் புத்திரர்கள் அனை வரும் நசிப்பதற்கு நானே காரணமாயிருக்கிறேன், குலத்துக்குக் குடாரியாய்ப் பிறந்த பெரும்பாவியான என்னை நீங்கள் பிள்ளையெ ன்று அழைக்கிறீர்களே என்று சொல்லிப் புலம்பத் தொடங்கினான்.

(இன்னும்வரும்.)

சமாசாரம்.

விமானமேறி வானத்தில் சஞ்சரிப்பது. — அமெரிக்காகண்டத்தில் ஐக்கியமாகாணத்திலே மூர் என்பவர் ஒருவர் கும்மட்டத்தில் ஏறிக்கொண்டு 35 நிமிஷநேரத்தில் 46 மைல்தூரம் ஆகாயத்தில் சஞ்சரித்தார். வானத்தில் அவர் ஸஞ்சரித்தவிடம் பூமியிலிருந்து ஏறக்குறைய 6000 அடி உயரத்துக்குமேல். அவ்வுயரத்திலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியின்மூலமாய்ப் பார்த்தபொழுதும் தரையிலுள்ள நியூயார்க்குமுதலிய பெரிய நகரங்களெல்லாம் சிறு சிறு புள்ளிகள்போலக் காணப்பட்டனவாம். கும்மட்டம் ஆகாயத்திலிருந்து இறங்கும்பொழுது அதைக்கண்டு காக்கைமுதலிய பறவைகள் மிகவும் பயந்து அப்புறம் ஓடிப்போகின்றனவென்றும், மேகமண்டலத்திற்குமேல் வானத்தில் செல்லும்பொழுது சிறிதும் சந்தடியில்லாமல் நிச்சப்தமாய் இருக்கிறதென்றும் அவர் சொல்லுகிறார். அவ்விடத்தில் சிறிய கடிகாரம் அடிக்கின்ற டிக், டிக் என்ற சத்தங்கூடத் தெளிவாய்க் காதுக்குக் கேட்கின்றதாம். ஒரு சிறு துரும்பை அசைத்தாலுங்கூடத் திடுக்கிடும்படியிருக்குமாம். அங்கே ஒரு நிமிஷத்துக்கு ஒரு மைல்வீதம் அதிவேகமாய் யாத்திரை செய்யும்போதும் இருந்தவிடம் விட்டு அசைவதாகக்கூடச் சிறிதும் தோன்றுவதில்லையென்கிறார். இவைகளையெல்லாம் கேட்கையில் நாமும் வாயுமண்டலத்தில் இவ்வாறு சிறிதுநேரம் சஞ்சரிக்கவேண்டுமென்கிற ஆவல் நமக்கு உண்டாகின்றதல்லவா? நீராவிக்கப்பல், இருப்புப்பாதைவண்டிமுதலியன இப்பொழுது எங்கும் சாதாரணமாகிவிட்டதுபோல, வானத்திலேறிச் செல்வதற்கேற்ற இவ்விமானமும் நாளளவிலே யாவரும் கையாளத்தக்க நிலைமைக்கு வந்துவிடுமென நாம் உறுதியாக நம்புகிறோம்.

நாகரிகத்தில் தேர்ச்சிபெறுவது.—இப்பொழுது நமது இந்துதேசம் இங்கிலாந்துமுதலியவிடங்களில் வருஷந்தோறும் குடிகளின் தொகை அதிகரித்துக்கொண்டே வருகின்றதாயினும் காவல் கிடங்குகளில் அடைபட்டுக் கிடக்கும் குற்றவாளிகளின் தொகைமாத்திரம் வரவரக் குறைந்துகொண்டே வருகின்றதெனக் கண்டறிந்திருக்கிறார்கள். இவ்வாறுவதற்கு முதன்மையான காரணம் என்னவெனில், ஏற்றத்தாழ்ச்சியின்றி யாவரும் ஒருமிக்கக் கல்வி கற்கும்படியானதும், அதற்கு ஏற்றபடி பலவிடங்களிலும் பாடசாலைகள் விசேஷமாய் ஏற்பட்டிருப்பதுமாகிய இவைமுதலிய திருத்தங்களேயாம்.

S. P. C. K. Press, Vepery, Madras. 1886.